பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 16 புதன்கிழமை (02.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 006

## ஆளும் தமிழ் - சிங்களக் கட்சிகளிடையே கடும் முரண்பாடு

# 13 ஆவது சட்டத் திருத்தம் குறித்த அரசின் நிலைப்பாடுதான் என்ன?

## தெளிவுபடுத்தக் கோருகிறார் மனோ கணேசன்



கொழும்பு, டிசம்பர் 02

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆளுங்கட்சிகளுக்கிடையிலேயே முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு முதலமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆகியோர் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்கிறார்கள். ஆனால் அரசுடன் இணைந்திருக்கும் ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க, தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ஸ ஆகியோர் அதனைப் பகிரங்கமாக எதிர்க்கின்றார்கள். எனவே இது தொடர்பில் அரசு தனது உறுதியான நிலைப்பாடு என்னவென்று மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு கோரியிருக்கின்றார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். (19ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கர்நாடக சங்கீதம் I,II, பரதநாட்டியம் I,II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வரலாறு I, II, III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## வவுனியா அகதி முகாம்களிலிருந்து மக்கள் வெளியே சென்றுவர நேற்று முதல் அனுமதி

கொழும்பு, டிச. 02

வவுனியா அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று முதல் சுதந்திரமாக வெளியில் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் முதலாம் திகதி முதல் இந்த மக்களுக்கு நடமாட்டச் சுதந்திரம் வழங்கப்படும் என இரு வாரங்களுக்கு முன்னர் அரசு அறிவித்திருந்தது தெரிந்ததே.

நேற்று நண்பகல் வரை ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயி (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி 9 ஆம் திகதியே யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.2

நீண்டகால இடைவெளியின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இலவசபாட நூல், சீருடை விநியோகங்களை வைபவ ரீதியாக ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகள் 1,23,000 பேரை 2 மாதங்களில் இங்கு மீளக்குடியேற்ற நடவடிக்கை

சென்னை, டிசெ.2

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் அனைவரும் அடுத்த இரு மாதங்களுக்கு இடையில் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் என்று இலங்கை அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கையின் துணைத் தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி இவ்வாறு சென்னையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:- (20ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவுக்கே ஆதரவு; இ.தொ.கா. அறிவிப்பு

கொழும்பு, டிசெ.2

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஏகமனதாக ஆதரிக்கப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே பிரதி அமைச்சரும் இ.தொ.காவின் தலைவருமான (20ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகா வேட்புமனு தாக்கல் செய்ய வழி திறந்தது

கொழும்பு, டிசெ.2

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டிக்கு தடங்கலாக இருக்கக்கூடும் என்று கருதப்பட்ட நிலை மாறி, அதற்கான வழி நேற்றுத் திறந்தது.

சரத் பொன்சேகா பதவியில் இருந்து விலகியதாக கடிதம் கையளித்தாலும், அவர் பதவி விலகியது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வேட்புமனு தாக்கல் செய்யப்படும் நாளுக்கு முன்னர் வெளியாகாது (20ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கின் மீள்குடியமர்வு குறித்து யாழ். வரும் ஜனாதிபதி ஆராய்வார்

யாழ்ப்பாணம், டிசெ.02

அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியான வலி.வடக்கில் மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்போது ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஜனாதிபதி இது விடயம் குறித்து விரிவாக ஆராய்வார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதிசெயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் கனடா சென்ற தமிழர்களில் புலி உறுப்பினர்களும் உள்ளனரா?

கொழும்பு, டிசெ.2

'ஓசியன் லேடி' என்ற கப்பல் மூலம் சட்டவிரோதமாக கடந்த ஒக்ரோபர் மாதம் கனடாவுக்குள் உட்பிரவேசித்த இலங்கைத் தமிழ் இளைஞர்கள் 76 பேரில் புலிகள் யார், சாதாரண பொதுமக்கள் யார் என்பதைக் கண்டறியும் முயற்சியில் கனடா மும்முரமாக இறங்கியுள்ளது.

கனேடிய அதிகாரிகள் இவ்விடயம் தொடர் (20ஆம் பக்கம் பார்க்க)




நிகழும் மங்களகரமான விரோதி வருடம் கார்த்திகை மாதம் 16 ஆம் நாள் இன்று (02.12.2009) புதன்கிழமை காலை 6.00-7.30 மணிவரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும்

நியூ ஸ்ரீகந்தன் சைவ உணவகம்

என்னும் நிறுவனத்தை திறந்து நடத்த இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து திறப்பு விழாவைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

151, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். முகாமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நேற்று 9 மணி நேரத்தில் 64.1 மி.மீ மழை! ஒரே நாளில் அதிகூடியது!! இன்று சீராகலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

குடாநாட்டில் ஓரிரு தினங்களாகப் பெய்துவந்த மழை தணிந்து இன்று காலை முதல் காலநிலை சீராகும் என்று வானிலை அவதான நிலைய யாழ்.அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்.புஷ்பநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை தொடர்ந்த மழையின் போது 64.1மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்தவருடம் ஒரே நாளில் பதிவாகிய கூடுதல் மழைவீழ்ச்சி இதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுப்பெய்த கடும் மழையால் யாழ்.நகரத்தை அண்டிய பிரதேசங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன. தாழ்ந்த நிலப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் புகுந்து பாதிப்பு ஏற்பட்டது. எனினும் குடாநாட்டின் ஏனைய சில பகுதிகளில் மழை ஓரளவே பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதனிடையில், கடந்த வருடங்களில் மாரி காலங்களில் மாதாந்தம் ஆகக்கூடுதலாக 340 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

ஆனால் கடந்த மாதம் 371.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இது கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகூடிய மழைவீழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

அதேசமயம் இந்த ஆண்டு ஜனவரி முதல் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் 869.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இவ்வாறு திருநெல்வேலியில் உள்ள வானிலை அவதான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-1-50-9)

## பசுமைப் புரட்சியாளரின் சாதனை

யாழ்ப்பாணம்,டிசெ.02.

பசுமைப்புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் இவ்வருடம் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயன்தரு மரங்களை இலவசமாக வழங்கியுள்ளார்.

கடந்த வருடமும் இவர் மூவாயிரம் மரங்களை வழங்கி குடாநாட்டு அபிவிருத்திக்குப் பெரிதும் உதவியுள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி ஸ்ரீ.சத்திய சாய் பாபாவின் அவதாரதினத்தில் மட்டும் தேசி, தோடை, மா, பலா, முருங்கை, சமண்டலை, மகோக்கனி போன்ற வகைகளைச் சேர்ந்த 832 மரக்கன்றுகளை வழங்கினார்.

இதுவரை காலமும் சுமார் 58 ஆயிரம் மரங்களை கடந்த 30 ஆண்டுகளில் வழங்கி இவர் சாதனை படைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-302)

## தேசத்தின் மகுடம் கண்காட்சி கண்டியில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.02.

நாடளாவிய ரீதியில் தேசத்தின் மகுடம் கண்காட்சி அடுத்தவருடம் இடம்பெறவுள்ளது. இக்கண்காட்சியில் வடக்கு - கிழக்கு உட்பட 230 உள்ளூராட்சி சபைகள் பங்குபற்றவுள்ளன.

இவ்வாறு மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை கண்டியில் இக்கண்காட்சி இடம்பெறும் என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இருந்தும் மேற்படி கண்காட்சியில் பங்குபற்ற 33 சபைகள் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-302)

## யாழ்.நகரில் விரைவில் மக்கள் கட்சி அலுவலம்

யாழ்ப்பாணம், டிசெ.02.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி தனது கட்சி அலுவலகம் ஒன்றை விரைவில் யாழ்.நகரில் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த வாரத்தில் கட்சியின் அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கலந்து கொள்வார் எனவும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் நவரட்ண உதயனுக்குத் தெரிவித்தார். (ஓ-1-111)

## கைதடி முதியோர் இல்லத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.2

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி உதவியை வடக்கு சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளது.

முதியோர் இல்லத்தைச் சுற்றிப் பாதுகாப்பு மதில்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் இல்லத்தின் நான்காம் விடுதியைப் புனரமைக்கும் பணி, புதிய விடுதி அமைக்கும் பணி என் பனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார். அத்துடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான அலுவலகமும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. (50-224)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்
திருமதி நவமணி சந்திரசேகரம்
(S.L.P.S-I)
(யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்)

எமது பாடசாலையின் அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் அவர்கள் இலங்கை அதிபர் சேவையில் தரம் 1 இற்கு (S.L.P.S-I) பதவி உயர்வு பெற்றதையிட்டு, அவரை வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று பல்லாண்டு வாழவேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

யா/இமையாணன் அ.த.க.
வித்தியாலயம்,
வல்வெட்டித்துறை. (90979) பாடசாலைச் சமூகம்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பொன்னுத்துரை
திருவருட்செல்வி
(2 ஆம் வட்டாரம் நயினாதீவு)
தோற்றம்: 24.10.1945
மறைவு: 12.12.2000

திதி: கார்த்திகை கார்தேய்பிரதமை
(02.12.2009)

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா! ஆண்டுகள்
ஒன்பது கடந்ததம்மா! உங்கள் துயரம்
எம்மை விட்டு நீங்கிடுமோ! அம்மாவே
எத்தனை பல நூற்றாண்டு சென்றாலும்
எமது அன்புத் தாய் அன்புக்கு நிகரேது அம்மாவே!
என்றும் உம் நினைவால் நயினை நாகபூஷணி
அம்பிகையின் திருவடிப் பொற்பாதங்களில்
நினைவுத் தீபம் ஏற்றி வைப்போம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
திரு.பொ.ஸ்ரீபாலன் (ஆசிரியர்),
குடும்பத்தினர் (நயினாதீவு, கந்தர்மடம்).

மணிக்கூட்டு வீதி,
யா/ சன்மார்க்க ம.வி.,
யாழ்ப்பாணம். (92715)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தன்
[ஆசிரியர், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்]

எமது சக ஆசிரிய நண்பரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் புரிக்கழகம்
கல்விமாணி 2 ஆம் ஆண்டு ஆசிரிய மாணவர்கள்
2007-2010 ஆம் வருடம்.
(92710)

## மரண அறிவித்தல்கள்

### சச்சிதானந்தம் கௌரீசன்

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் கௌரீசன் நேற்று (01.12.2009) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சச்சிதானந்தம் - இந்திராணி தம்பதியினரின் அன்பு மகனும் சுதர்சினியின் அன்புக்கணவரும் துவாரகன், மதுஷா, கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையும். மதனன், அபிராமி (பிரான்ஸ்),பிரதீபா, பிரசாத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலீபனின்(பிரான்ஸ்) மைத்துனரும் லக்ஷனின் அன்பு மாமாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (92714)
தகவல்: சி.சச்சிதானந்தம் (தந்தை)

### வைத்தியஜோதி திருமதி நீற்றா இன்னாசித்தம்பி



சில்லாலை, இன்னாசித்தம்பி வைத்திய நிலைய வைத்தியஜோதி திருமதி நீற்றா இன்னாசித்தம்பி 30.11.2009 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார், அமரர் வைத்திய சிரோன்மணி எமில் இன்னாசித்தம்பியின் அன்பு மனைவியும், அமரர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி, ஸ்ரீமகள் (U.S.A), ஜெயந்தன், ரவிந்தன் (Canada) ஆகியோரின் அருமைத்தாயாரும், ஜொவித்தா, கலாநிதி ஜோர்ஜ் பிள்ளை நாயகம் (U.S.A), பிறீனி ஆகியோரின் அன்பு மாமியாரும், துஷாரா, தனுஷ்ரன், தனுஷா, தமாரா, பிரியாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.12.2009) புதன் கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு சில்லாலை, கதிரைமாதா தேவாலயத்தில் திருப்பலியும் இறுதிச்சடங்குகளும் நிறைவேற்றப்பட்டு, சில்லாலை சேமக்காலையில் இன்னாசித்தம்பி நினைவுச் சிற்றாலயத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (சி/562858)
தகவல்: ஜெயந்தன் (மகன்).

### கதிர்காமத்தம்பி சரஸ்வதி

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி சரஸ்வதி நேற்று (01.12.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பியின் அன்பு மனைவியும், அருந்தவராணியின் அன்புத் தாயும், காலஞ்சென்ற நாகராஜாவின் அருமைச் சிறிய தாயாரும், இலங்கைநாயகம், உஷாநந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,கேசவன் - கலைவாணி, மயூரன் - மாதங்கி, துஷ்யந்தி (அமரர்) ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், நந்துஷன், வர்ஷிகன், லக்ஷயன், தேனுஷன் ஆகியோரின் பூட்டியும், கனகநாயகி,காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் பாசம்நிறை சகோதரியும், நடராசா, காலஞ்சென்ற சிவபாலசுந்தரம் ஆகியோரின் நேசம் நிறை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2009) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமகிருஸ்ண பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (92713)
தகவல்: மகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகலிங்கம் மனோன்மணி

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் மனோன்மணி நேற்று (01.12.2009) செவ்வாய்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி நாகலிங்கத்தின் (ஓய்வு பெற்ற புகையிரத பகுதி மேற்பார்வையாளர்) அன்பு மனைவியும் கனகலிங்கம், Dr.சுப்பிரமணியம் (கனடா), திருமதி மகேஸ்வரி (ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர்), திருமதி சறோஜினிதேவி, சண்முகநாதன், சற்குணநாதன் (பகவான் களஞ்சியம், கல்வியங்காடு), கணேசநாதன் (இலங்கை வங்கி, சுன்னாகம்), பத்மநாதன் (உபவேந்தர் , கிழக்கு பல்கலைக்கழகம்), திருமதி தனலக்சுமி (ஆசிரியை, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), விமலநாதன் (ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தாயாரும் திலகவதி, ராஜினி(கனடா), சுப்பிரமணியம், மனோகரன், பாரததேவி, சிவயோகம், காஞ்சனா, சுமதி, ஈசன், கலைவாணி (ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமியும், அரவிந்தன், (ஜேர்மனி), மதிரூபன் (ஆசிரியர்,நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை), அனிதா, விசாரதன், கஜரதன், சோபனா, வாசுகி, அனுசனா, அனோஜன், சர்மி, சலஞ்ஜா, சரண்யா (மக்கள் வங்கி, சுன்னாகம்), அபராஜிதன் (கொழும்பு பல்கலைக்கழகம்) , பராபரன், சஞ்சீவன், சிவாந்தி, அகிலன், பிரணவி, துளசிதன், சதுர்த்திகா, சாகினியா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இலக்கியா, நட்சத்திரா, ஆகியோரின் பூட்டியும், திருமதி பரஞ்சோதி மாணிக்கத்தின் (கோப்பாய் வடக்கு) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலி தெற்கு, மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (02.12.2009) புதன் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாயில் உள்ள பிப்பிலி மயானத்திற்கு மாலை 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (சி/562862)
தகவல்: ஈசன், குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

இல.48A, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா குலசேகரம் என்பவரது தேசிய அடையாள அட்டை இல.560742916V, JOB CARD அடங்கிய பேஸ் திருநெல்வேலிச் சந்தையடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு:- இல.48A, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0214590262, 0778689560

## தவறிவிட்டது

காரைநகர், முல்லைப் பிளவைச் சேர்ந்த நடராசா சிவநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (672811015V), இராணுவ அடையாள அட்டை, கடற்படை அடையாள அட்டை என்பவற்றுடன்,சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட வேறு சில ஆவணங்களும் , பணப்பையுடன் காரைநகரிற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கனகலிங்கம் தொலைபேசி நிலையம் , காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.இல. 0217451835, 0772247641

## தவறிவிட்டது

86/1,பிறவுண் வீதி,கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த கருணாகரன் துஷ்யந்தன் என்பவரது தேசிய அடையாளஅட்டை (913511425V) 29.11.2009 அன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், திருநெல்வேலிக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள்

தொடர்புகளுக்கு: 0776569715, 0770784089

## ராஜீ திருமண சேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 31 வயது , செவ்வாய் குற்றமற்ற, பூர நட்சத்திரம், பட்டதாரி அரச ... மணமகனுக்கு பட்டதாரி / உத்தியோக மணமகள் தேவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## 13ஆவது திருத்தத்தைச் சுற்றி நடத்தப்படும் அரசியல் சித்து

'சுத்திச் சுத்தி சுப்பரின் கொல்லைக்குள்......!' என்பார்கள். அந்தக் கதை போலவே இருக்கின்றது இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பல தரப்பினரும் கூறும் கருத்து. மீண்டும் எல்[illegible] சுப்பரின் கொல்லை மாதிரி '13ஆவது திருத்தம்' என்ற [illegible]த்துக்குள் வந்து விழுந்துள்ளனர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் என்பது சரியாக 21 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையின் அதியுயர் சட்டமான அரசமைப்பில் - முறைப்படி - சட்டரீதியாக - சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் அடங்கிய ஏற்பாடாகும்.

இந்த நாடு இலங்கையின் அரசமைப்புப்படி நிர்வகிக்கப்படுவதாக - ஆளப்படுவதாக - ஆட்சி செய்யப்படுவதாக - கூறப்பட்டாலும், அரசமைப்பில் சட்ட ரீதியாக இருக்கும் பதின்மூன்றாவது திருத்த ஏற்பாடுகள் மட்டும் இங்கு முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படவே இல்லை. ஏனென்றால், இந்தத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயமான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் அம்சங்கள் அதில் இருப்பதால் அது மட்டும் நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் தூக்கிப் போடப்பட்டுவிட்ட நிலைமை. அதையாவது நடைமுறைப்படுத்தி, சிறுபான்மையினருக்கான நியாயமான அதிகாரப் பகிர்வில் சொற்பத்தையாவது மேற்கொள்ளுங்கள் எனத் தமிழர்கள் கெஞ்சும் நிலைமை. இலங்கையின் அதியுயர் சட்டத்தில் உள்ள 13 ஆவது திருத்த ஏற்பாடுகளின்படி தமிழர்களுக்கு உரியதைக் கேட்டால் கூட, அதைப் பிச்சையாகத்தன்னும் தூக்கிப் போட விரும்பாத இறுமாப்பில் செருக் குடன் நிற்கிறது தென்னிலங்கை ஆட்சிப்பீடம்.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் இலங்கைத் தமிழர்களின் நீதி,நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யப் போதுமானதா என்பது வேறு விடயம். அது தமிழர்கள் தீர்மானிக்க வேண்டிய விவகாரம்.

ஆனால் அதைக்கூட - சட்டத்தில் உள்ளதைக்கூட - தமிழர்களுக்கு வழங்கக்கூடாது என்று - பிடிவாதமாக நிற்கிறது தென்னிலங்கை ஆட்சி என்பது வெளிப்படையானது.

இவ்வாறு தமிழர்களுக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் கூறப்பட்ட அதிகாரங்களைக் கூடப் பகிர்ந்தளிக்கக் கூடாது என்று விடாப்பிடியாக நிற்கும் தென்னிலங்கை பௌத்த - சிங்களத் தீவிரவாத சக்திகளே இன்று கொழும்பு ஆட்சித் தலைமையைச் சூழ்ந்து - பக்க பலமாக - நிற்கின்றன என்பதும் கண்கூடு.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தென்னிலங்கையின் கருத்தொருமைப்பாட்டை உருவாக்குவதற்கான கட்டமைப்பு என்ற பெயரில் இலங்கை ஜனாதிபதியால் நிறுவப்பட்டு, மூன்றாண்டுகளாக இயங்கிய 'அனைத்துக் கட்சிக் பிரதிநிதிகள் குழு' இது சம்பந்தமாக சில அடிப்படை யோசனைத் திட்டங்களைத் தயாரித்தது. எனினும், அவற்றையெல்லாம் கிடப்பில் போட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவற்றையெல்லாம் விட்டு விட்டு, அரசமைப்பின் 13 ஆவது திருத்த ஏற்பாடுகளை முதல் கட்டமாக நடைமுறைப்படுத்துங்கள் என்ற கோரிக்கையை இடைக்கால சிபாரிசாகத் தமக்கு சமர்ப்பிக்கும்படி அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமிஞ்ஞை காட்டினார் அவர்.

அதன்படி, 13 ஆவது திருத்தத்தின் அடிப்படை விடயங்களை - பிரதான விவகாரங்களை - தவிர்த்து, ஏனையவற்றை உள்ளடக்கி, 'நீர்த்துப்போன' திட்டம் ஒன்றை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு கடந்த ஜனவரியில் ஜனாதிபதியிடம் இடைக்கால சிபாரிசாகக் கையளித்தது.

அப்போதைய நிலையில் அதிகாரப் பரவலாக்கலுக்கு வலியுறுத்தி நின்ற இந்தியாவின் காதில் பூச்சுற்றுவதற்காக, 'பதின்மூன்றாவது திருத்த ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்தவே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு வலியுறுத்துவதாக' பிரசாரம் செய்யவும் கொழும்பு தவறவில்லை.

1988 இல் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அதைக் கடுமையாக எதிர்த்த தரப்புகளில் அப்போதைய எதிரணி எம்.பியான மஹிந்த ராஜபக்ஷவும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட அடக்கம்.

ஆனால், கடந்த ஜனவரியில் ஏதோ பதின்மூன்றாவது திருத்தம் மூலம்தான் தீர்வு என்ற மாதிரி திடீர் 'ஞானம்' பிறந்து பேசினார் ஜனாதிபதி மஹிந்தர். ஆனால் அத்தோடு அதுவும் கிடப்பில் போடப்பட்டு விட்டது.

அவ்வப்போது - இடையிடையே - பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வு காண்போம் என்று கூறுவதுடன் அவரின் போக்கு அடங்கிவிட்டது.

இப்போது, வேடிக்கை என்னவென்றால், அரசமைப்பின் சட்ட ஏற்பாடுகளில் இன்னும் வலிதாக இருக்கும் 13 ஆவது திருத்த ஏற்பாடுகளைத் தன்னும் இதுவரை நடைமுறைப்படுத்த இணங்காத - முன்வராத - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்திடம், 'இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதாக அமையவேண்டும். அதற்கு அரசுத் தலைமை இணங்க வேண்டும்.' - என்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் அந்த நிர்வாகத்தில் ஆரம்பம் முதலே தொங்கிக் கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி. நிபந்தனை விதிக்கின்றதாம்.

13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வது இருக்கட்டும். முதலில், 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்ற கோஷத்தைத் தமிழ் மக்கள்முன் காட்டி அரசியல் நடத்தும் ஈ.பி.டி.பியால், 13 ஆவது திருத்தத்தில் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ள பொலிஸ், நில அதிகாரங்களையாவது மாகாணசபைகளுக்கு நடைமுறையில் அரசினால் வழங்கச்செய்ய முடியுமா என்பதை உறுதிப்படுத்திக் காட்டட்டும். இருக்கும் 13 ஆவது திருத்தத்தையே தாம் சேர்ந்து நிற்கும் அரசைக் கொண்டு நடைமுறைப்படுத்தச் செய்வதற்கு வக்கற்ற இவர்கள் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வது பற்றி அரசுத் தலைமைக்கு நிபந்தனை விதிக்கின்றார்களாம்!

# 7இலட்சத்து 21 ஆயிரத்து 359 வாக்காளர்கள் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு தகுதி

யாழ்ப்பாணம்,டிசெ.2

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 7இலட்சத்து 21ஆயிரத்து 359பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இத்தகவலை யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு தேர்தல் திணைக்களம் எமக்கு அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதியான வாக்காளர்களின் விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் 53 ஆயிரத்து 111பேரும், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் 63ஆயிரத்து 991 பேரும், காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் 69ஆயிரத்து 82பேரும், மானிப்பாய் தேர்தல் தொகுதியில் 71ஆயிரத்து 114பேரும், கோப்பாய் தேர்தல் தொகுதியில் 65ஆயிரத்து 798பேரும், உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் 56ஆயிரத்து 426பேரும், பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் 48ஆயிரத்து 613பேரும், சாவகச்சேரி தேர்தல் தொகுதியில் 65ஆயிரத்து 141பேரும், நல்லூர் தேர்தல் தொகுதியில் 72ஆயிரத்து 558பேரும், யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் 64ஆயிரத்து 714பேரும், கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் 90ஆயிரத்து 811 பேரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்- என்றார்.(50-9)

# வலிகாமம் வடக்கு மக்களின் மீள் குடியமர்வு; யாழ்.வரும் ஜனாதிபதி உறுதிமொழி தர வேண்டும்

## தெல்லிப்பழையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக, எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உறுதிமொழியை கோருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வலி.வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், திருமதி பத்மினி சிதம்பரநாதன், மற்றும் வலி.வடக்கு சங்கத்தலைவர் ஆர்.சி.நடராஜா,ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் உறுப்பினர் எஸ்.சீவரட்ணம் உட்பட பெரும் எண்ணிக்கையான இடம்பெயர்ந்த மக்களும் கலந்துகொண்டனர்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எதிர்வரும் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலி.வடக்கு மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பான உறுதி மொழியினை வழங்கவேண்டும்.

மீள்குடியேற்றத்தின் ஆரம்பக்கட்டமாக வலி.வடக்கிலுள்ள மக்களின் விவசாய நிலங்களுக்குச் செல்ல அனுமதிப்பதுடன், தமது ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதற்கும் அனுமதி வழங்கப்படவேண்டும்.

இந்தப்பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு மேற்படி மக்களின் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொள்ள வேண்டும்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்ட நிலையில் வலி.வடக்கில் மீளக்குடியேற வேண்டிய ஆயிரக்கணக்கான பொதுமக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருக்கின்றனர். இவர்களின் தொழில் வாய்ப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.மேற்படி தீர்மானங்களை மிகவிரைவில் அரசஅதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கைகளை வலி.வடக்கு புனர்வாழ்வுக்குழு மேற்கொண்டுள்ளது.

## பருத்தித்துறை வீதியை அகலமாக்கி புனரமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.2

பருத்தித்துறை வீதியை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

புத்தூர் சந்தியில் இருந்து வல்லை வெளி வரையான வீதியே இவ்வாறு அகலமாக்கிப் புனரமைக்கப்படுகின்றது.

இந்த வீதியை அகலமாக்கிப் புனரமைப்பதற்காக பொதுமக்களின் கட்டடங்கள் சிலவும் அகற்றப்படுகின்றன.

புனரமைப்புப் பணிகளுக்கு இடையூறாகக் காணப்பட்ட வீட்டு மதில்கள், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக போடப்பட்ட தற்காலிக கட்டடங்கள் என்பவற்றை இடித்து அகற்றும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்த வீதியை அகலமாக்கும் பணியைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. (50-224)

## பொன்விழா சிறப்பு மலர் வெளியிட சைவப் புலவர்களின் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், டிசெ.2

கடந்த 50 ஆண்டுகளில் சைவப் புலவர் பட்டம் பெற்றவர்கள் சகல ஆவணங்களுடன் அவற்றின் நிழற் பிரதியுடனும், புகைப்படம் ஒன்றுடனும் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்துக்குச் சமுகமளிக்குமாறு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர், சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் கேட்டுள்ளார்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு, 2010 ஆம் ஆண்டு பொன்விழாச் சிறப்பு மலர் வெளியிட இருப்பதால் மலரின் சைவப்புலவர்களது சுயவிவரங்கள், கல்வித் தகைமைகள், சேவைகள், படங்கள் போன்ற விவரங்களை வெளியிடுவதற்கே இவை திரட்டப்படுகின்றன.

பட்டம்பெற்றவர்கள் வெளிநாட்டில் வசிப்பின் அல்லது மரணமடைந்திருப்பின் அவர்களின் உறவினர்கள் தரவுகளை சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

## இடம்பெயர்ந்த மாணவர்கள் பரீட்சை எழுத யாழ்.வலயத்தில் நான்கு விசேட நிலையங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.2

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் இம்முறை சாதரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்.கல்விவலயத்துக்குட்பட்ட மாணவர்களுக்கு நான்கு விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வசதியாக விசேட பரீட்சை நிலையங்களை அமைக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை அதிகமாக உள்ளமையே இதற்குக் காரணம்.

இதில் புதிய பாடத்திட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும், பழைய பாடத்திட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, தென்மராட்சி கல்வி வலயத்தில் புதிய பாடத்திட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் பழைய பாடத்திட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றவோருக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பரீட்சைநிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-9)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 17 03.12.2009 வியாழக்கிழமை |
| திதி: | பிரதமை பி.ப.12.32 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் பி.இ.01.36 வரை |
| சுபநேரம்: | 07.45-09.15 வரை |
| ராகுகாலம்: | 01.45-03.15 வரை |

## பட்டதாரிகளுக்கு நாளை கலந்துரையாடல்

வேலை வாய்ப்பில் பாதிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வெலிங்டன் சந்திக்கு சமீபமாகவுள்ள 'பெக்கன்', கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

வன்னியில் இருந்து வருகைத[illegible]துள்ள பட்டதாரிகளையும் இதில்கலந்[illegible] கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கே[illegible]டுள்ளனர். (ஒ-80)

## இலட்சார்ச்சனை

வட்டுக்கோட்டை, உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் விரதத்தையொட்டி இலட்சார்ச்சனை மஹாயாகம் நிகழ்[illegible] நாளை தொடக்கம் எதிர்வரும் 22 ஆ[illegible] திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7 மணிக்கு இலட்சார்ச்சனையும், முற்பகல் 10 மணிக்கு பிள்ளையார் கதைப்படிப்பும் இடம் பெறும். (50-(204)

## பரிசளிப்பு விழா

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு தின விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.[illegible] மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியி[illegible] குமாரசாமி மண்டபத்தில் நடை[illegible] பெறும்.

கல்லூரி அதிபர் வி.ஞானகாந்த[illegible] தலைமையில் நடைபெறும் இந்[illegible] நிகழ்வில் பிரதம விருந்தினரா[illegible] வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி[illegible] கத்தி இராசையா கலந்துகொள்வார். திருமதி கமலாதேவி இராசையா பரிசில்களை வழங்குவார். (ஒ-16)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தி
யாசாலை முன்னாள் அதிபர்
தி.அருட்பிரகாசம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி தியாகராசா பொன்னம்மா**
**(பூமணி)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் சோதி வேம்படி
வித்தியாசாலை, மானிப்பாய். (92695) பாடசாலைச் சமூகம்.

## திருமறைக் கலாமன்றத் தினம் நாளை கொண்டாடப்படுகிறது

யாழ்ப்பாணம், டிசெ.2

கலைக்கான பணியில் திருமறைக் கலாமன்றத்தின் 45 ஆவது ஆண்டின் ஆரம்பத்தையும், மன்றத்தின் இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் 70 ஆவது அகவை பூர்த்தியையும் சிறப்பிக்கும் திருமறைக் கலாமன்றத்தினம் நாளை வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 7 மணிக்கு கலைத்தூது மணி மண்டபத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து மு.ப. 10.30 மணிக்கு மன்றத்தின் இளையோர் அவையின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 4 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். இதன்போது நடனங்கள், இசைக்கச்சேரி என்பனவற்றுடன் சிறப்பம் சமூக கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறும். மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருள் பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்து சிறப்பிப்பார்.

இந்த நிகழ்வுகளில் திருமறைக் கலாமன்றத்தின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் உட்பட அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

(50-224)

## தவறவிட்டது

திடற்புலம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு எனும் முகவரியுடைய லோகநாதன் வனயன் என்பவருடைய தே.அ.அட்டை (902012494V) கே.கே.எஸ் வீதியில் யாழ்ப்பாணத்துக்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது.தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் அல்லது பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். T.P:0779640146, 0772844253

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் வணிகக்கல்வி ஆசிரியர்

**பஞ்சரத்தினம் ஜனார்த்தன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இளையதம்பி இந்து
வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழையமாணவர். (92696)

## மரண அறிவித்தல்

**திருமதி மகேந்திரவர்மன் புஷ்பராணி (கோகிலா)**



சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி மகேந்திரவர்மன் புஸ்பராணி 28.11.2009 அன்று கண்டி அரசினர் பொது மருத்துவமனையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் (மணியம் ஸ்ரோர்ஸ், அளவெட்டி) சிரேஷ்ட புத்திரியும் பழனிஐயா - மகாதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் மகேந்திரவர்மனின் (முன்னாள் இலிகிதர், K.C.W, K.K.S) பாசமிகு மனைவியும் கோமதி, வர்மேந்திரன், இந்துமதி, ஜெயமதி ஆகியோரின் அன்புத் தாயும் ஆனந்தன், வர்ஜினி, ரமேஷ், ஜோன்ஷன் ஆகியோரின் அன்பு மாமியும் புண்ணியசீலன் (அதிபர் - யூனியன் கல்லூரி), சத்தியசீலன் (மணியம் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), சாவித்திரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யமுனா, தயாநிதி, குகலிங்கம், சாவித்திரி, பொன்னம்மா, மகமாரித்தேவி, ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஹெவின், அபிநயா ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும் கேதாரணி, நர்த்தனி, கோகிலன் ஆகியோரின் அன்பு அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2009) புதன்கிழமை பலாலி வீதி, கோண்டாவிலிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
கோண்டாவில்.

தகவல்: (92702)
சு.புண்ணியசீலன் [அதிபர் - யூனியன்கல்லூரி - தெல்லிப்பழை]


# Computer Express
**Institute of Information Technology**
*No.167, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 8250*



A/L பரீட்சை எழுதிய
மாணவர்களே! கணனி ஆர்வலர்களே!
ஊழியர்களே! தங்கள் நலன்கருதி
யாழ்நகரில் முதன்முறையாக
தமிழ்மொழி விளக்கத்துடன் தொழில்சார்
கணனி கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன...

| Course | Fee | Duration |
| --- | --- | --- |
| Professional Diploma in Microsoft Office | 3500 /= | 3 Months |
| Diploma in Printing Technology & Desk top Publishing | ~~22500/=~~ 4500/= | 4 Months |
| Diploma in Server Technology & Web Page Designing | ~~22500/=~~ 4500/= | 3 Months |
| Diploma in Graphic Designing & Adverdisement Marketing | ~~22500/=~~ 4500/= | 4 Months |
| Diploma in Hard ware Engineering & Net working | ~~20000/=~~ 4000/= | 3 Months |
| Diploma in Computerized Accounting & E- Commerce | ~~22500/=~~ 4500/= | 3 Months |
| Diploma in Computer Science & Programming | ~~22500/=~~ 4500 /= | 4 Months |
| Diploma in Auto CAD & Arcetecture Designing | ~~22500/=~~ 4500/= | 3 Months |
| Honours Diploma in Information Technology | ~~32500/=~~ 6500/= | 6 Months |

**50 % Advance Courses**

| Course | Fee | Duration |
| --- | --- | --- |
| Diploma in Film Technology & Video Editing | ~~10000/=~~ 5000/= | 4 Months |
| Diploma in Studio Technology & Multi Media | ~~9500/=~~ 4750/= | 4 Months |




நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட வன்னி வாழ் மாணவர்களுக்காக விசேட சலுகைகள் வழங்கப்படும்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | |
| --- | --- |
| Batch I | 4/12/2009 10am or 2pm |
| Batch II | 5/12/2009 11am or 2pm |
| Batch III | 6/12/2009 11am or 2pm |
| Batch IV | 9/12/2009 10am or 2pm |





# வெங்கடேஸ்வரா
## டிரான்ஸ்போட் சேவிஸ்

இன்று [02.12.2009] புதன்கிழமை முதல் **A-9**
பாதையூடாகப் போக்குவரத்துச் சேவை
ஆரம்பித்து வைக்கப்படுகிறது

☆ எவரும் எதிர்பாராத குறைந்த கட்டணத்தில்
☆ முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட
பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை
☆ பொருள்கள் ஒப்படைத்து மூன்று நாள்களில்
கிடைக்கும்
☆ கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும்
அலுவலகங்களைக் கொண்டு
இயங்குகின்றது.




இன்றே நாடுங்கள்
உங்கள் தேவையை இலகுவாக்குவதற்கு

125, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 8306

127, பழைய சோனகத்தெரு, கொழும்பு - 12.

(ச/562856)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய சுவரொட்டிப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மங்களவிளக்கேற்றுவதையும், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. ஜெகதீஸ்வரன் உரையாற்றுவதையும் முதலிரு படங்களிலும், உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் வைத்திய கலாநிதி என். சிவராஜா, யுனி செவ் யாழ்.வலய வதிவிடப் பிரதிநிதி டயனி அராக்கி, நிக்கொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனத்தின் வெளிக்களத் தலைமை அலுவலர் மரியா திரேசியா ஐரா ஆகியோர் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குவதை எடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

## விநாயகர் விரத பெருங்கதைப் படிப்பு

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழன் முதல் விநாயகர் விரத பெருங்கதைப் படிப்பு ஆரம்பமாகின்றது.

இதனையொட்டித் தினமும் மு.ப. 10.30 மணி முதல் அபிஷேகம், பூசை, புராண படிப்பு என்பன இடம்பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி கஜமுகா அசுரசம்ஹாரமும், மறுநாள் கணபதிஹோமமும் நடைபெறும். (50-100)

## பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலைப் பரிசளிப்பு

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

அதிபர் அருட்சகோதரி அ.மே.யோ. றீற்றா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரிதயதாசன் ஜெகூ கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக இளவாளை திருக்குடும்ப கன்னியர் மடம் தலைவி அருட்சகோதரி ஸ்ரெலா துரைசாமியும், கௌரவ விருந்தினராக ஐ.ஓ .எம். நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் தே. யூறிசன் ஜெயறாஜும் கலந்து கொள்வர். (50-112)

# புனரமைக்கப்பட்ட கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையை திறந்து வைக்க அமைச்சர் திஸ்ஸ கரலியத்த யாழ்.வருகிறார்

## நடமாடும் சேவையையும் அவர் ஆரம்பித்து வைப்பார்

வண்ணை, டிசெ.2

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் கைதடி, ஆயுள்வேத சித்த போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

வைத்தியசாலையைத் திறந்து வைப்பதற்கும் ஆயுள்வேத திணைக்களத்தின் நடமாடும் சேவையைத் தொடங்கி வைப்பதற்காகவும் சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, ஆணையாளர் திருமதி றமணி குணவர்த்தன அடங்கிய குழுவொன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வருகை தரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கும், 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் கைதடி, ஆயுள்வேத வைத்தியசாலையில் நடைபெறும் ஆயுள்வேத திணைக்களத்தின் நடமாடும் சேவையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச ஆயுள்வேத வைத்தியர்களின் சுயவிவரக் கோவையிலுள்ள குறைபாடுகள் ஆராய்ந்து நிவர்த்தி செய்யப்படும்.

அத்துடன், இத்தினங்களில் பரம்பரை வைத்தியர்களுக்கான பதிவுகளும் மேற்கொள்ளப்படும். மேலும் ஆயுள்வேத மருந்து உற்பத்தி நிலையங்கள் பதிவு செய்தலும் தரநிர்ணய சான்றிதழ் வழங்கலும் இந்த நடமாடும் சேவையில் இடம்பெறும்.

நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கான மூலிகைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் வடமராட்சிப் பிரிவைச் சேர்ந்த 5 பாடசாலைகள் கலந்து கொள்ளும். பிற்பகல் 1.30 மணிக்கு அதே கருத்தரங்கு சுன்னாகம், இராமநாதன் கல்லூரியில் இடம் பெறும். இதில் வலிகாமம் பிரிவைச் சேர்ந்த 5 பாடசாலைகள் கலந்துகொள்ளும்.

5ஆம் திகதி காலை 9 மணிக்கு லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரியில் மாணவர்களுக்கான விரிவுரை இடம்பெறும். அதே வேளை கைதடி; ஆயுள்வேத வைத்தியசாலையில் பரம்பரை வைத்தியர்களுக்கான விரிவுரையும், நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான செயற்றிட்டமும் நடைபெறும்.

6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நயினாதீவு, நாகதீப விகாரை வளாகத்தில் இலவச வைத்திய சிகிச்சை நிலையமும் அதற்கான மருந்து வகைகள் வழங்கலும் அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவால் ஆரம்பித்து வைக்கப்படும்.

பிற்பகல் 1மணிக்கு கைதடி, சித்த ஆயுள்வேத வைத்தியசாலை 1ஆம், 2ஆம் நோயாளர் விடுதிகளும், பிரசவ விடுதியும், அம்புலன்ஸ் தரிப்பிடமும் அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவால் திறந்து வைக்கப்படும்.

இவற்றுடன் 5ஆம், 6ஆம் திகதிகளில் 'எங்கள் வைத்திய இல்லம்' ஐந்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவங்களும் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கானை, தெல்லிப்பழை, தென்மராட்சி, கோப்பாய், வேலணை ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொரு இல்லங்கள் நிறுவப்படும்.

நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு கைதடி, சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலைவளாகத்தில் 'கொரியன்' அக்குபஞ்சர் சிகிச்சை நிலையமொன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது. (50-160)

# உள்ளகத் தொலைபேசி வசதி இல்லாததால் சாவகச்சேரி நோயாளர் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ளகத் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படாததால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

புதிதாக அமைக்கப்பட்ட நிர்வாக அலகுக் கட்டடத்தில் வெளிநோயாளர் பிரிவு, நோயாளர்கள் அனுமதிக்கும் பிரிவு உட்பட பல பிரிவுகள் உள்ள போதிலும் இங்கிருந்து 300 மீற்றருக்கு அப்பால் விடுதிகள் உள்ளன.

அண்மையில் இரவு வேளையில் கொண்டுவரப்பட்ட நோயாளி ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அங்கு அவ்வேளை தாதிய உத்தியோகத்தர் இல்லாததால் கடமையில் இருந்த ஊழியர் விடுதிக்குச் சென்று தாதி ஒருவரை அழைத்து வந்த பின்னரே நோயாளிக்கு சிகிச்சை அளிக்க முடிந்தது என்றும் கூறப்பட்டது.

இந்த வைத்தியசாலையில் எட்டு தாதிய உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதால் இரவு வேளைகளில் விடுதிகளில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களே இரவில் வரும் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளது.

விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமாயின் வெளிநோயாளர் பிரிவுக்குச் சென்று அங்கு கடமையில் இருக்கும் மருத்துவரையே அழைத்து வரவேண்டிய நிலையும் உள்ளது.

இந்த நிலைமைகளைத் கருத்திற் கொண்டு உள்ளக தொலைபேசி இணைப்புக்களை உடனடியாக வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என நோயாளர் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகிறது.

(ஒ-207)

# 'திருவுடையாள்' பிரதேச மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.2

வடமராட்சி தெற்கு,மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் திருவுடையாள் பிரதேச மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.




கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை காரை நகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலனும், ஆய்வுரையை யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் ஏற்புரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி த.கலாமணியும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலினை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க,முதற்பிரதியை நெல்லியடி செல்லமுத்தூஸ் புடைவையக உரிமையாளர் ச.பிறேம்குமார் பெற்றுக்கொள்வார்.(204)

# மாதாந்த உதவிப்பண அட்டை மீளாய்வு

நவாலி,நவ.2

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வருபவர்களின் பணம் பெறும் அட்டைகள் நாளை வியாழக்கிழமை முதல் மீளாய்வு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று நவாலி கிழக்கு ஜே-135 கிராம சேவையாளர் பிரிவிலும் எதிர்வரும் 8 ஆம் திகதி ஜே-136 கிராம சேவையாளர் பிரிவிலும் 10 ஆம் திகதி ஜே-137 மானி. வடக்கு கிராம சேவையாளர் பிரிவிலும், 11 ஆம் திகதி ஜே-138கிராம சேவை யாளர் பிரிவிலும் மீளாய்வு நடைபெறும்.

சம்பந்தப்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டை, குடும்பப் பதிவு அட்டை, குடும்பப் படம், பணம் பெறும் அட்டை என்பவற்று டன் காலை 9 மணிக்கு கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு சமூக சேவைஉத்தியோகத்தர் [illegible] கேட்டுள்ளார்.

(50-100)

## உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

**03.12.1985**

ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை குறித்து எடுத்துக் கூறினர்.

**03.12.1985**

மட்டக்களப்பில் மீண்டும் சிறை உடைப்பு முயற்சி

மட்டக்களப்பு சிறைச்சாலைக்குள் இனம்தெரியாத ஆயுததாரிகள் உட்புக முயன்றனர். சிறைக் காவலர்கள் உஷார் அடைந்ததால் தமது முயற்சியைக் கைவிட்டு ஆயுததாரிகள் தப்பி ஓடிவிட்டனர்.

**02.12.1985**

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக மத்திய அரசை ஜனதாக் கட்சி சாடுகிறது

இலங்கைத் தமிழர்களின் உண்மை நிலையை உலக நாடுகளிடம் எடுத்துக்கூற இந்திய அரசு தவறிவிட்டதாக ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

**02.12.1985**

பேச்சுவார்த்தை தோல்வியெனில் பூண்டோடு அழித்து விடுவேன் என ஜே.ஆர்.பேட்டி

வருட இறுதிக்குள் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வொன்று ஏற்படாவிட்டால் பிரிவினைவாத கெரில்லாக்களைத் தாம் பூண்டோடு ஒழித்துவிடப்போவதாக ஜே.ஆர். 'இந்தியா ருடே' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

**03.12.1985**

எப்போதும் வெற்றி எமக்கே எனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

அரசு பயங்கரவாதப் பிரச்சினையைச் சமாதானம் மூலம் தீர்க்க விரும்புவதாகவும் மறுதரப்பு இராணுவத் தீர்வை விரும்பினால் அதற்கும் அரசு தயாரெனவும் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவிப்பு.


**03.12.1985**

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு இலங்கை அரசு ஐ.நா.வுக்குப் பதில் சொல்லியாகவேண்டும் என்கிறார் லக்ஸ்மன் ஜெயக்கொடி

மனித உரிமை மீறல்தொடர்பான குற்றச்சாட்டுக்கு இலங்கை அரசு ஐ.நா.வுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் எனவும் சிங்கள மக்கள் யுத்தத்துக்குத் தயார் இல்லை எனவும் அத்தனகல்ல எம்.பி. லக்ஸ்மன் ஜெயக்கொடி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர்
# திரு.வாமதேவா தியாகேந்திரனின்
# 58 ஆவது பிறந்த தின சிறப்பு மலர்



## பிறவியைப் பயனுள்ளதாக ஆக்கிக்கொண்டவர்



இன்று வாமதேவா தியாகேந்திரனின் பிறந்தநாள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பிறந்த பிறவியைப் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ளத்தான் தேடிய பொருளை அறமாக ஆக்கிக்கொள்ள தியாகி அறக்கொடை நிதியத்தை ஆரம்பித்து அல்லற்படும் மக்களுக்கு ஆறுதல் வழங்கும் நிறுவனமாக இன்று பல்துறைசார்ந்த பணிகளை ஆற்றியிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இப்பணியினூடாக பல துன்பச் சுமைகளைச் சுமந்துகொண்டு வாழும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்து இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகின்ற வாமதேவா தியாகேந்திரன் பல்லாண்டு காலம் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

'அறம் வாழ, தர்மம் வாழ வாழ்க வளமுடன்'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம

## கஷ்டப்பட்ட மக்களுக்கு பேருதவி புரிகின்றார்

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

என்னும் வாக்கிற்கு இணங்க நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் அந்நிய நாட்டில் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் தமது சொந்த நாட்டில் வாழும் பலவிதமான கஷ்ரப்பட்ட மக்களுக்கு பேருதவி புரிந்தும் நிறுவனத் தொண்டுகள் செய்தும் வருகின்றார். தியாகி அவர்கள் 58ஆவது அகவையைப் பூர்த்தி செய்கின்ற தருணத்தில் எல்லாம் வல்ல வைரவப் பெருமானைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்
பிள்ளையார் கோயில், அத்தியடி-யாழ்ப்பாணம்.

## தியாகத்தின் அதுவான வடிவம்

தனக்குரியதை பிறரின் நலனிற்காக தானாக இழத்தல் தியாகம். தியாகத்திற்காக கருத்து வடிவமாக மட்டுமல்லாது செயல்வடிவமாகவும் மிளிர்வது தியாகி அறக்கொடை நிறுவனம். நீண்டகாலம் துன்பங்களே வாழ்வின் வடிவமான வடபுலத்தில் துயர் துடைக்கும், துணை புரியும் முதன்மை அமைப்புகளில் தியாகி அறக்கொடை நிறுவனம் ஒன்றாகிறது.

எமக்கு அனுபவிக்க வேண்டிய இன்பங்கள், துன்பங்கள் இரண்டினையும் இறைவன் தன் பொருட்டு செயலாற்ற பலரை செயற்பட வைக்கிறான் என பெரியவர்கள் உரைகின்றார்கள். இதற்கமைய எமது சமூகத்தின் ஆதரவு தேவையானவர்களுக்கு ஊன்றுகோலாக அல்ல துணைக் காலான உணர்வுடன் அமைவதாக நிதிய ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களது பெரும்பணி அமைகிறது.

எங்கள் தேசத்தில் ஆதரவு அவசியமான விடயங்களை இனங்கண்டு அவற்றில் மிக முக்கியமானவை எல்லாவற்றிற்குமான பணியை தனது அறக்கொடைக்குள் உள்ளடக்கிய பெருமை தியாகி அறக்கொடை நிறுவனத்திற்குரியது. வசதி குறைந்த முதியவர்களுக்காக மாதாந்த உதவி, இலவச மருத்துவ சேவை, போஷாக்கு உணவு, புற்றுநோயாளர்களுக்கான மாதாந்த உதவி, சுயதொழில் உதவி, தொழிற்பயிற்சி, மாணவர்களுக்கான உதவி, சிறுவர் காப்பகம் என விரியும் அறக்கொடையின் பணிகளுக்கு தனியொருவராக நிதிப் பங்கு ஆற்றுபவராக மதிப்பிற்குரிய திரு.வாமதேவா தியாகேந்திரன் திகழ்கிறார்.

அவர்களது பிறந்ததின நல்நாளில் நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் அவருக்கு நல்கவேண்டும எனவும் அவரது அறப்பணிகளின் விளைவு மிக மிக உயர்வாக அமைய வேண்டும் எனவும் இறைவனை வேண்டுகின்றேன்.

திருமதி பீ.சிவலிங்கம்,பிராந்திய ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## தாய்நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்த சேவை

தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தபாகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் சுவிற்ஸர்லாந்து நாட்டிலே தனது சுகபோக வாழ்க்கையை விடுத்து தனது தாய் நாட்டு மக்களின் மேம்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்து அயராது உழைத்து வருவது எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

முதியோராகிய எங்கள் மூத்த பிரஜைகளுக்கு முதலிடம் கொடுத்து ஆதரவற்ற முதியவர்களுக்கு ஓய்வூதியத்தை ஆரம்பித்தார். எமது உடல் உள ஆரோக்கியத்திற்காக தாட்சாயினி மருத்துவ நிலையத்தை ஆரம்பித்து ஞாயிறு தோறும் எம்மை கூட்டிச்சென்று இலவச சிகிச்சை அளித்து நாவிற்கினிய இலைக்கஞ்சியும் வழங்குவது பாராட்டத்தக்கது.

இந்நிறுவனம் சமூகத்தில் உள்ள எல்லா மட்ட வசதியற்றவர்களுக்கும் உதவிவருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் திக்கற்ற அனைவரும் தியாகி அறக்கொடை நிறுவனத்தையே நாடுகின்றனர்.

இந்நிறுவனத்தை நிறுவி உதவி வரும் வள்ளல் தியாகியின் பிறந்த நாளான இன்று எங்கள் சங்கத்தின் சார்பில் அவரை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்,போற்றுகின்றோம்.

தலைவர்,
சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்கம்.

## தியாகச் செம்மலுக்குப் பிறந்த நாள் வாழ்த்து

ஆதரவற்றோரை அரவணைத்து
ஏழைகள் வாழ்வை மலர்வித்து
கிராமிய நிறுவனங்களுக்கு வலுவூட்டி
வாரி வழங்கும் வள்ளல் தியாகியே!
அகவை 58 ஆவது இந்நன்நாளில்
நிறை வாழ்வு வாழ்ந்து சேவையாற்ற
மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

மல்லாகம் மத்தி, கிராமிய மாதர் அபிவிருத்திச் சங்கம்.

## மண்பயனுற மகத்தான சேவை செய்தவர்



சேவை செய்வதே ஆனந்தம், அதிலும் தன்னலங்கருதாது, சேவையறிந்து சேவை செய்தல் பேரானந்தம் என்பதை உணர்ந்து, எம் மண்ணில் தியாகி அறக்கொடை நிறுவனத்தினர் பெரும் சேவைகளைச் செய்து வருகின்றனர். எமது சமுதாயத்தை உன்னிப்பாய் நோக்கி, எங்கெங்கு என்னென்ன தேவைகள் உண்டென்பதைச் சரிவர அறிந்து, அங்கெல்லாம் தன்னாலான உதவிகளைச் செய்துவரும் தியாகி அறக்கொடை நிறுவனத்தினின் சேவை எம் மண்ணில் மகத்தானதாகும். சிறுவர் இல்லம், வறிய மாணவர்க்கு கல்விக்கான உதவி, மருத்துவ உதவி, முதியோர்க்கு உதவி, பெண் தலைமைததுவ குடும்பங்களுக்குச் சுய வருமானம் கிடைக்கும் வரை மாதாந்த உதவி, தொழிற் பயிற்சி எனப் பல்வேறு சேவைகளையும் எம் மக்களுக்கு அளித்துவரும் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் செயற்பாடுகள் அனைவர்க்கும் மிகச் சிறந்ததொரு வழிகாட்டலாய் அமைந்துள்ளது.

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை, மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்று ஈகைக்கு வள்ளுவனால் வழங்கப்பட்ட வரைவிலக்கணத்திற்கு அமைய வாழ்ந்துவரும், தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் மண்பயனுற, மகத்தான சேவைகள் செய்து பல்லாண்டு வாழ்ந்திட, பிறந்த தினத்தில் வாழ்த்துகின்றேன்.

அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்

## நெடுங்காலம் வாழ்ந்து தொடர்ந்து சேவையாற்றுக



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் பிறந்தநாளை ஒட்டி இன்று இடம்பெறும் எளிமையான நிகழ்வு சம்பந்தமான எனது மனமார்ந்த வாழ்த்துக்களை அவருக்கு தெரிவித்து கொள்கின்றேன்.

திரு.தியாகேந்திரன் அவர்களுடைய வளர்ச்சியையும், உயர்ச்சியையும் அவரது இளமைக் காலத்தில் இருந்து தூர நின்று அவதானித்து வருபவரென்ற முறையில் அவரை வியந்து பாராட்ட வேண்டியது எமது ஒரு சமூகப் பொறுப்பாகும் என கருதுகின்றேன்.

திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் தமது வருமானத்தில் கூடிய பகுதியை மனித நேயத்தோடு எமது மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற பாதிக்கப்பட்ட சிறுவர் முதல் முதியோர் வரையான பல்வேறு தரப்பு மக்களுக்கும் உதவுவதற்காக ஒதுக்கி வருகின்றார்.இதன் பொருட்டு தியாகி அறக்கொடை நிறுவனம் என்ற கட்டமைப்பை உருவாக்கி அதை நிறுவனமயப்படுத்தி சுவிஸ் நாட்டில் இருந்தே நிர்வகித்து வருகின்றமை போற்றுதற்குரியது.

பொதுவாக அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவுமே வெவ்வேறு நிதி வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் நிதிவளங்கல் மூலமே சேவையாற்றுகின்றனர். இதற்கு விதிவிலக்காக தியாகி அறக்கொடை நிறுவனம் ஒரு தனிநபரான திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் பங்களிப்பு மூலம் சேவையாற்றுவது மிகப்பெரிய முன்னுதாரண செயற்பாடாகும.

திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்கள் இன்னும் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து எம்மவர்க்கு தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் என வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சீ.வி.கே.சிவஞானம், தலைவர்,
யாழ் மாவட்டஅரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

## மானிடசேவையே மாதவ சேவை



மானிட சேவையே மாதவ சேவை என்னும் தாரக மந்திரத்தை சிரமேற்கொண்டு அமைதியான முறையில் அருஞ்சேவையாற்றி வரும் தியாகி அறக்கொடை நிலையம் பற்றி அறியாதவர்கள் இல்லை எனலாம்.

அவரை நான் சந்தித்த போது அவரது வெள்ளை உள்ளத்தையும் தியாக சிந்தையையும் உணர முடிந்தது. அவரின் இனிய குணத்தினால் எடுக்கும் எல்லா காரியங்களிலும் சித்தி பெறுபவர். தனிமனித சிந்தனையில் தோன்றிய இந்நிறுவனத்தின் தொழிற்பாடாக ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கான சிறுவர் இல்லம், புற்று நோயாளர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான உதவி, உயர்கல்வி தொடர முடியாத நிலையில் உள்ள இளைஞர் யுவதிகளின் இன்னல் போக்கி ஊக்குவித்தல், வறிய பாடசாலை மாணவர்களுக்கான உதவி, சுயதொழில் முயற்சிக்கான பயிற்சி போன்ற பரந்துபட்ட சேவையினை வழங்கி வருகிறது. இப் பெருந்தகை எம் யாழ் மண்ணிலே, நாவலர் வீதி நல்லூரிலே தோன்றியமை எமக்குப் பெருமை சேர்க்கின்றது. இவரது பிள்ளைகள் கல்வியில் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதற்கும், நிறைவுடன் வாழ்வதற்கும் இவரது சேவையே மூல காரணமாகும். இவரது தந்தையும் உயர் விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்த உயர் பண்பாளன் தந்தையின் முன் மாதிரிகளை பின்பற்றுகின்ற இச் செம்மலின் சேவை வாழையடி வாழையாக வையகத்தில் நிலைக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அவரை வாழ்த்தி அக மகிழ்கின்றேன்.

திருமதி. இ. இராகினி, J/108, கிராம உத்தியோகத்தர்

## நோயின்றி நெடுங்காலம் வாழ்க!

தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் திரு.வாமதேவா தியாகேந்திரனின் பணி போற்றத்தக்கதொன்று. இவர் வறுமைக்கோட்டுக்குள் அல்லற்படும் மக்களைக் கண்டு வாழ்வாதாரம் கொடுப்பதோடு, வேலைத்திட்டங்களை ஆங்காங்கு ஆரம்பித்து படித்த வாலிபர்கள், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை அளித்து பெரும்பணிபுரிகின்றார். இந்த ரீதியில் எமக்கும் கச்சாய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு நிதி உதவி அளித்ததன் மூலம் எமது அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறைக்கடன் மூலம் சுயதொழிலில் ஈடுபட வாய்ப்பளித்தமையை நாம் நினைவு கூராமல் இருக்கமுடியாது.

இவர் எல்லா வளமும் பெற்று நோயின்றி, பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

கச்சாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்.

## ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பவர்



ஆதரவற்ற சிறுமிகளுக்கான காப்பகம், வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மாதாந்த உதவி, பெண் தலைமைத்துவத்தின் கீழான குடும்பங்களுக்கு வருமானம் பெறும் வழிகளைத் தேடும் வரை மாதாந்த உதவி, சுயதொழில் முயற்சிக்கு கடன் உதவி, புற்று நோயாளருக்கு மாதாந்த உதவி, சிகிச்சைக்காக கொழும்பு செல்ல வசதி குறைந்தோருக்கு போக்குவரத்து உதவி வழங்கி முதியோர்களுக்கு மாதாந்த உதவி, அவர்களுக்கு வாரந்தோறும் இலவச மருத்துவ சிகிச்சையுடன் போசாக்கு உணவு வழங்கல், வசதி குறைந்த பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி முதலிய திட்டங்களை முன்னெடுத்து செயற்படும் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் பணிகளுக்கு நிதி உதவி வழங்கி வரும் புரவலரான அதன் தாபகர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் பிறந்த தினத்தில், அவர் பலநலமும் பலவளமும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.

" ஓர் தட்டிலே பொன்னும்
ஓர் தட்டிலே நெல்லும்
ஒப்ப விற்ற
கார் தட்டிய பஞ்ச காலத்திலே
யார் தட்டினும் "

தட்டாது வழங்கிய சீதக்காதி மரக்காயரைப் போல வரையாத் வள்ளன் கொண்ட இப் பெருமகன் நீடு வாழ்ந்து தியாகி அறக்கொடை நிறுவனத்தின் மூலம் மேலும் நல்ல பல பணிகளை முன்னெடுத்து செல்ல வேண்டும் என இதயம் மலர வாழ்த்துகின்றேன்.

திருமதி. யோ. பற்குணராஜா
மாநகர முதல்வர், யாழ் மாநகரசபை.

## பரிதிபோல் நிலைத்து வாழி

தாய்த் திரு நாடாம் எங்கள்
தனி எழில் யாழ்ப்பாணத்தில்
வாழ்ந்திடும் பலரும் இன்று
வளம் பல தேட என்றே
ஊரினை விட்டு ஓடிச் சென்று
உறவெலாம் மறந்த பின்னே
தாய் மொழி மறந்தோராகி
தன் மான உணர்ச்சி கெட்டு
மனம் போன போக்கில் மேயும்
மந்தை போல் வாழ்தல் கண்டீர்
இடையிடை தமிழ் விழா என்ற
தம் தலையினைக் காட்டக் கண்டீர்

இப்படிச் சீர் இழந்த சேற்றினிலே
செந்தாமரை ஒன்று மலரக்கண்டேன்
இம்மண்ணின் மைந்தன் என்னும்
இணையிலாக்குணத்தின் குன்று
பண்பினில் சிகரமானோன்
பார்வைக்கோ எழியோனான
தியாகத்தின் உறைவிடமே ஆனான்
தியாகேந்திரன் என்னும் செம்மல்

தாய்த்திரு நாட்டை தனது
தாயிலும் மேலாய் போற்றி
உற்ற பேர் இடர்கள் போச்சி
உவப்பான திட்டம் தீட்டி
கற்பனை வளமும் சேர அன்னான்
கண்டனன் புதுயுகமொன்றிங்கு
கல்வியே கண்ணாய் கொண்டு
கற்றிடப் பலற்கு உதவுகின்றான்
முதியோரைக் கூட்டி வந்து
முதுமை யைப்போக்குகின்றான்
கைத்தொழில் பலதும் கண்டு
காக்கின்றான் பல குடும்பம் தன்னை
அருந்தமிழ் பேச்சுப் போட்டி
அறவளிப் பாடசாலை யென்று
குழந்தைகள் தம்மைக் கூட்டி
குதூகலித்திட வைக்கின்றானே

பல்பொருள் அங்காடி கட்டி
பளிங்கு போல் மண்டபத்தில்
பற்பல யுவதிகட்கு ஒன்றாய்
பாங்குடன் வேலை தந்து
அற்புதத் தொண்டு செய்து
ஆனந்தக் களிப்பில் மூழ்கி
அனாதைக்கு உணவு ஊட்டி
ஆண்டவனைக் காண்கின்றானே!

தொண்டினில் சிறந்தோய் வாழி
தூய நற் தமிழா வாழி
அன்புசேர் தொண்டா வாழி
அறிவினில் சிகரம் வாழி
தன்புகழ் காக்க என்றே
தமிழ்த் தாயாள் பெற்றெடுத்த
மண் மிசை மா மழையே
மாசிலா மனையாள் ஒடும்
மற்றுள மகதகளோடு கூடி
பன் நெடுங்காலம் மண்மேல்
பரிதி போல் நிலைத்து வாழி

திரு.மு.திருநாவுக்கரசு (விகடகவி)
ஓய்வு பெற்ற நீதிபதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலக நாடுகளின் பெருமளவு பணம் பொன்சேகாவின் தேர்தல் பிரசாரத்திற்கு

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகிறது

கொழும்பு.டிசெ.2

''சரத் பொன்சேகா அமெரிக்காவின் ஒரு கைப்பொம்மையாக இயங்குகிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்கு லண்டன், பிரான்ஸ் போன்ற மேற்குலக நாடுகளிலிருந்து பெருமளவில் பணமும் உதவிகளும் ரணில் விக்கிரமசிங்க ஊடாக அவருக்கு வழங்கப்பட்டு வருகின்றன.''

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் உறுப்பினர் கலாநிதி பியசேன திஸாநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பு தேசிய நூலகத்தின் ஆவண சபையில் ஞாயிறன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே கலாநிதி திஸாநாயக்கா இதனைத் தெரிவித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவித்த திஸாநாயக்கா மேலும் கூறியவை வருமாறு:-

அண்மையில் சரத்பொன்சேகா அமெரிக்கா சென்றிருந்தார். அவர் அந்த நாட்டின் பிரஜாவுரிமையைப் பெற்றவர்.

அமெரிக்காவின் வெளிநாட்டு அமைச்சின் உதவிச் செயலாளராகக் கடமையாற்றும் பிளேக்குடன் நீண்ட நேரம் சரத்பொன்சேகா பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார். தற்போதைய ஜனாதிபதி மஹிந்தவை தோற்கடிப்பதற்கும் அதன் பிறகு இந்த நாட்டின் ஆட்சியை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்துவிட்டு அமெரிக்கப் பிரஜையாக வரும்படியும் அதற்கான சகல வசதிகளும் செய்து தரப்படும் எனவும் சரத்பொன்சேகாவிடம் பிளேக் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இராணுவ சீருடை அணிந்து யுத்தம் செய்த காலத்தில் இலங்கையின் யுத்த ரகசியங்களை வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருக்கின்றார். அதுகுறித்த தகவல்கள் 'லண்டன் ரைம்ஸ்', 'ஸ்கை நியூஸ்' ஆகிய ஊடகங்களில் வெளிவந்துள்ளன. அவர் இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெற்றவர். இராணுவப் பதவியிலிருந்து வெளியேறிய பின் யுத்த இரகசியங்களை வெளியிடுவது அவர் இந் நாட்டுக்குச் செய்யும் பாரிய துரோகமாகும்'' - என்றார்.

தேசப் பற்றுள்ள இயக்கத்தின் உறுப்பினர் கலாநிதி வசந்த பண்டாரவும் இங்கு உரையாற்றினார். (சி)

# தபால் மூல வாக்களிப்புக்கு நேற்று முதல் விண்ணப்பம்

கொழும்பு.டிசெ.2

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் நேற்று (டிசெம்பர் 1) முதல் விண்ணப்பிக்க முடியும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் நிறுவனத்தின் தலைவர் மூலம் மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தர் ஊடாக அனுப்பப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்படையினர், பொலிஸார், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் சகல அரச அதிகாரிகள் மற்றும் உத்தியோகஸ்தர்களும் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# சரத் தமது எதிரிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார் அதனால் அவரது உயிருக்கு ஆபத்து என்கிறார் டளஸ்

கொழும்பு,டிசெ.2

''ஜெனரல் சரத் பொன்சேகாவின் உயிருக்கு ஆபத்துக்கள் இருக்கின்றன என நானும் சந்தேகிக்கின்றேன். ஏனெனில் அவர் தமது பரம எதிரிகளுடன் ஒன்றிணைந்தே அரசியல்பயணத்தை ஆரம்பித்திருக்கிறார்.''

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொருளாளரும் போக்குவரத்து அமைச்சருமான டளஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியளாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜெனரல் பொன்சேகாவின் உயிருக்கு ஆபத்து இருக்கின்றது என நானும் சந்தேகிக்கின்றேன். ஏனெனில் அவரைச் சுற்றி இருப்பவர்கள் புலி நண்பர்கள் ஆவர்.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருந்தார். மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுக்கு என்ன நடந்தது. அவர்களைச் சுற்றி இருந்தவர்கள் புலி நண்பர்களே. ஆகவே தான் அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

சரத் பொன்சேகாவும் இதே அச்சுறுத்தல்களையும் இதே பிரச்சினைகளையும் எதிர் கொள்கின்றார். இவருக்குப் பா காப்பு அச்சுறுத்தல் இருப்பதாக நாமும் அஞ்சுகின்றோம். அவர் கவனமாக இருக்க வேண்டும் என எச்சரிக்கின்றோம். ஆளும்கட்சி தேர்தலை எதிர்கொள்வதற்கு தயார் நிலையிலேயே உள்ளது. 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவகையில் மஹிந்த சிந்தனையில் இன்னும் பல திட்டங்களை கொண்டு வர உள்ளோம்.

எதிர்க் கட்சியின் பொதுவேட்பாளர் என்ற வகையில் பொன்சேகாவை நான் வரவேற்கின்றேன். ஆனால் அவர் அவருடைய பழைய எதிரிகளுடன் அரசியல் வாழ்க்கையை ஆரம்பிக்கிறார் என்பது எனக்கு கவலை அளிக்கின்றது.

சரியான அரசியல் தலைவர்கள் இல்லாமையாலேயே முன்னைய இராணுவ தளபதிகளால் யுத்தத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. இன்று பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் தற்போது எந்தக் கூட்டணியில் பொன்சேகா போட்டியிடுகின்றாரோ அந்தக் கூட்டணியின் முக்கிய பங்காளர்களில் ஒருவராகப் பிரபாகரன் இருந்திருப்பார். - என்றார். (சி)

# புலம்பெயர்ந்த தமிழ்ப் புத்திஜீவிகளின் சந்திப்பு: ஜனவரியில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு செய்து வருகிறார்

கொழும்பு, டிசெ.2

புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ்ப் புத்திஜீவிகளை யாழ்ப்பாணத்தில் ஒன்று திரட்டி, வடமாகாணத்தை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயன்று வருகின்றார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் பெரும்பாலும் ஜனவரி 12 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியவை வருமாறு:-

''இலங்கைத் தமிழ்ப் புத்திஜீவிகள் நாட்டுக்குத் திரும்பி வந்து, வடமாகாணத்தின் அபிவிருத்தியில் பங்கேற்பதற்குக் காலம் கனிந்துள்ளது. யுத்தத்தால் வடமாகாணம் சின்னாபின்னமாகிவிட்டது. இந்நிலையில் தமிழர்களின் அபிலாஷைகளை அரசியல் ஊடாக மாத்திரம் தனியே நிறைவேற்றிக் கொள்ள முடியாது. புத்திஜீவிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய துறைசார் நிபுணர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

அவர்கள் தற்போதைய அமைதிச் சூழலில் நாடு திரும்பி வடமாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளில் பங்கேற்க முடியும். புலம்பெயர்நாடுகளிலுள்ள தமிழர்கள் செய்யவேண்டிய அபிவிருத்திப் பணிகள் ஏராளமாக உள்ளன. அவர்களின் வருகைக்காக எமது கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. அவர்கள் இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது. - என்றார்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் புத்திஜீவிகளின் யோசனைகளை உள்வாங்கி வடமாகாணத்தை அபிவிருத்தி செய்கின்றமை தொடர்பான திட்ட நகல் ஒன்று தயாரிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (சி)

# முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவிக்குமாறு மனிதாபிமான அமைப்பு அரசிடம் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.02

இராணுவத்தால் நடத்தப்படும் முகாம்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் புலிப் போராளிகளை அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று இலங்கையிலுள்ள ஒப்லேற் சமூக சேவை என்கின்ற கிறிஸ்தவ மனிதாபிமான அமைப்பு அவசரமாகக் கோரிக்கை விடுத்துள்ளது.


இந்த முன்னாள் புலிப் போராளிகள் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இல்லாமல் விரக்தியின் விளிம்பில் தவிக்கின்றார்கள் என்றும் இந்த மனிதாபிமான அமைப்பின் முக்கிய பிரமுகரும் முன்னாள் தலைவருமான வணபிதா போல் ஜயந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளவை வருமாறு:-

இந்த முன்னாள் புலிப் போராளிகளில் அநேகர் சிறுவர்களாக உள்ளனர். இம்முன்னாள் புலிப் போராளிகளில் பலர் காயமடைந்தவர்கள். உடலாலும் மனதாலும் தளர்ந்தவர்கள். சொந்த உறவுகளைப் பிரிந்து நிற்பவர்கள். இவர்களைத் தொடர்ந்தும் தண்டிக்கக்கூடாது. இவர்கள் விரக்தியின் விளிம்பில் இருக்கிறார்கள். நித்திரையின்றித் தவிக்கின்றார்கள்.

சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் வன்முறைகள், பாரபட்சம் ஆகியவற்றுக்குப் பலிக் கடாவாகிவிட்டனர். சுமார் 11 ஆயிரம் முன்னாள் புலிப் போராளிகள் இவ்வாறு அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை அரசு மனிதாபிமான அடிப்படையில் உடன் விடுதலை செய்யவேண்டும். (சி)





செலான் வங்கியின் மானிப்பாய் கிளை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் செலான் வங்கியின் தலைவர் ஈஸ்மன் நாரங்கொட, நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராசா, பொதுமுகாமையாளர் அஜித் நிவாட் கப்ரால், உதவிப் பொதுமுகாமையாளர் சுனில்சில்வா, கலாநிதி பி.நிரஞ்சன் ஆகியோர் மாலை அணிவிக்கப்பட்டு சிறுவர் நடனத்துடன் வரவேற்கப்படுவதையும், செலான் வங்கியின் தலைவர் ஈஸ்மன் நாரங்கொட, நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.நடராசா ஆகியோர் இணைந்து கிளையை நாடாவைவெட்டித் திறந்து வைப்பதையும், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி எஸ்.சந்திரசேகர மங்கள விளக்கேற்றுவதையும் முதல் மூன்று படங்களில் காணலாம்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் பிரதம குருக்கள் ஜெயகுமார், யாழ்.நாகவிகாரையின் விமலதேரர், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்கலாநிதி ஜெபரட்ணம் ஜெபமோகன் அடிகள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவதையும், சிறுமி ஒருவர் பணத்தை வைப்புச் செய்வதையும் அடுத்துள்ள நான்கு படங்களிலும் காணலாம். *(படங்கள்: ஓங்காரன், சரவணன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 61

## கொழும்பின் பிரபல்யமான பாடசாலைகள் இணைந்து தயாரித்த மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

# கர்நாடக சங்கீதம் – I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

★ இல. 1 - 40 வரையுள்ள வினாக்களில் 1, 2, 3, 4 ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. இசைக்கு ஆதாரமான ஸ்வரங்கள்,
1) ஐந்து. 2) எட்டு. 3) ஆறு. 4) ஏழு.

02. தாளம் தொடங்கும் முன் பாட்டு ஆரம்பிப்பது,
1) அநாகத எடுப்பு. 2) சம எடுப்பு. 3) அதீத எடுப்பு. 4) எடுப்பு.

03. துருவதாளம் எடுத்துக்கொள்ளும் அங்கம்,
1) IUO 2) IOII 3) IIOO 4) IOI

04. முல்லைப் பண்ணுக்குரிய இராகம்,
1) பந்துவராளி. 2) கல்யாணி.
3) மோகனம். 4) மத்தியமாவதி.

05. விவாதி தோசமற்ற மேளங்களின் எண்ணிக்கை,
1) 72 2) 36 3) 32 4) 40

06. எல்லா ஸ்வரங்களும் தீவிரமாய் அமைந்துள்ள இராகம்,
1) கல்யாணி. 2) தோடி.
3) கரஹரப்பிரியா. 4) சங்கராபரணம்.

07. நீர் கற்ற இராகமாலிகையின் முதல் கண்டிகை அமைந்துள்ள இராகம்,
1) மாண்டு. 2) காபி.
3) வசந்தா. 4) மத்தியமாவதி.

08. இராமநாடகத்தை தமிழில் எழுதி கம்பர் அரங்கேற்றிய திருவரங்கத்திலேயே அரங்கேற்றம் செய்தவர்,
1) தியாகராஜசுவாமிகள். 2) பாபநாசம்சிவன்.
3) அருணாசலக் கவிராயர். 4) முத்துத்தாண்டவர்.

09. பண்டைய காலத்தில் இராஜகதம்பம் என அழைக்கப்பட்ட உருப்படி,
1) வர்ணம். 2) இராகமாலிகை.
3) ஸ்வரஜதி. 4) ரூபதாளம்.

10. தீரசங்கராபரணத்தில் மேள எண்ணை அட்சரமாகக்கொண்ட தாளம்,
1) கண்டதுருவம். 2) சங்கீர்ண துருவம்.
3) மிஸ்ரதுருவம். 4) சங்கீர்ண அட.

11. ''ரேவதி ராகம்'' என்னும் இலட்சண கீதத்தை இயற்றியவர்,
1) பொன்னையாபிள்ளை. 2) பொன்ஸ்ரீவாமதேவன்.
3) புரந்தரதாஸர். 4) முத்துத்தாண்டவர்.

12. ஹிந்துஸ்தானி இசையில் தாளத்திற்கு உபயோகிக்கப்படும் வாத்தியம்,
1) மிருதங்கம். 2) கஞ்சிரா. 3) தபேலே. 4) டொல்கி.

13. இந்தியாவின் கல்விப் பாடநெறியில் சங்கீதம் ஒரு பாடமாக இணைக்கப்படுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர்,
1) சுப்ரமணியபாரதியார். 2) சாம்பமூர்த்தி ஐயர்.
3) தேசிகவிநாயகம்பிள்ளை. 4) கவிகுஞ்சரபாரதி.

14. ஸிம்மேத்திர மத்திமத்தின் மேள எண்,
1) 56. 2) 57 3) 65 4) 22

15. இசை கலந்த உரையுடன் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சி,
1) குழு இசை. 2) வில்லுப்பாட்டு.
3) பல்லியம். 4) விமர்சனம்.

16. '+' என்னும் குறியீடு குறிப்பது,
1) அனுத்ருதம். 2) புலுதம். 3) காகபாதம். 4) குரு.

17. 'அன்பேதான்......' என்னும் சஞ்சாரி கீதம் அமைந்துள்ள இராகம்,
1) பிலஹரி. 2) மலஹரி. 3) மத்தியமாவதி. 4) சுத்தசாவேரி.

18. சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம் என்னும் இரண்டு ஸ்வரங்தானங்களும் அமைந்துள்ள மேளச்சக்கர எண்,
1) 4ஆவது, 10ஆவது. 2) முதலாவது, 7ஆவது.
3) 3ஆவது, 9ஆவது. 4) 6ஆவது, 12ஆவது.

19. நீர் கற்ற 'சம்போ மஹாதேவா.......' என்னும் ஸ்வரஜதியினை இயற்றியவர்,
1) வீரமணி ஐயர். 2) T.V.பிச்சையப்பா.
3) திலகநாயகம்போல். 4) பெரியசாமிதூரன்.

20. ஏழு தாளங்கள் 32 தாளங்களாக காரணமாக அமையும் அங்கம்,
1) த்ருதம். 2) குரு. 3) அனுத்ருதம் 4) லகு

21. தற்போது வழக்கில் உள்ள பண்களின் தொகை,
1) 8 2) 24 3) 103 4) 12

22. ''இராமதாஸ'' என்னும் முத்திரையுடைய வாக்கேயக்காரர்,
1) முத்துத்தாண்டவர். 2) பாபநாசம்சிவன்.
3) அருணாசலக்கவிராஜர். 4) சியாமா சாஸ்திரிகள்.

23. பண்ணிசை வளர்ச்சியுற்ற காலம்,
1) 14ஆம், 15ஆம் நூற்றாண்டு. 2) 18ஆம், 19ஆம் நூற்றாண்டு.
3) 20ஆம் நூற்றாண்டு. 4) 7ஆம், 8ஆம் நூற்றாண்டு.

24. நாம் ஓர் அலங்காரத்தினை 2ஆம் காலத்தில் பாடும்போது வரும் மொத்த ஆவர்த்தனங்கள்,
1) 21/2 2) 7 3) 5 4) 10

25. மங்கள வாத்தியங்களில் ஒன்று,
1) புல்லாங்குழல். 2) நாதஸ்வரம். 3) வீணை. 4) வயலின்.

26. பழனி முருகனின் அருள்வேண்டிப் பாடிய திருப்புகழ்,
1) உம்பர் தரு. 2) துள்ளுமத.
3) வசனமிகவேற்றி. 4) விலைக்குமேனியில்.

27. ''அங்கமும் வேதமும்....' எனும் தேவாரம் அமைந்துள்ள பண்,
1) சீகாமரம். 2) நட்டபாடை. 3) ஸாதாரி. 4) குறிஞ்சி.

28. ரி, க, ம, த, நி என்னும் ஐந்து ஸ்வரங்களும்,
1) ஸப்தகம். 2) அஷ்டகம். 3) விக்ருதி. 4) ப்ரக்கிருதி.

29. பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களுள் ஒன்பதாவது ஸ்வரஸ்தானம்,
1) ஸதுஸ்ருதி ரிஷபம். 2) காகலி நிஷாதம்.
3) சுத்த தைவம். 4) அந்தர காந்தாரம்.

30. ஜனக இராகத்திற்குரிய மறுபெயர்களில் ஒன்று,
1) ஷாடவ இராகம். 2) வர்ஜ இராகம்.
3) வக்ர இராகம். 4) இராஜாங்க இராகம்.

31. ஹிந்துஸ்தானி இசையில் காபி என அழைக்கப்படும் இராகம்,
1) மோகனம். 2) சங்கராபரணம்.
3) கரஹரப்பிரியா. 4) தோடி.

32. யாழிமுகம் கொண்ட வாத்தியம்,
1) தம்புரா. 2) வீணை.
3) வயலின். 4) கோட்டுவாத்தியம்.

33. ஸப்ததாள அலங்காரங்களில் இடம்பெறாத ஜாதி,
1) திஸ்ரம். 2) மிஸ்ரம். 3) சங்கீர்ணம். 4) கண்டம்.

34. ''சங்கீத பிதாமஹர்'' என அழைக்கப்படும் வாக்கேயக்காரர்,
1) பாபநாசம்சிவன். 2) புரந்தரதாஸர்.
3) சியாமாசாஸ்திரிகள். 4) முத்துத்தாண்டவர்.

35. கோயில்களில் அதிகாலையில் பாடப்படும் பாடல்,
1) பஞ்சபுராணம். 2) நவசந்திப்பண்.
3) திருப்பள்ளி எழுச்சி. 4) திருப்பல்லாண்டு.

36. வாத்யத்ரயம் என அழைக்கப்படும் வாத்தியங்கள்,
1) மிருதங்கம், தவில், கஞ்சிரா.
2) புல்லாங்குழல், நாதஸ்வரம், முகர்சிங்.
3) வீணை, வயலின், தம்புரா.
4) வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்.

37. ''ஏழுமலைமேல்......' என்னும் சஞ்சாரி கீதத்தில் கூறப்பட்டுள்ள கடவுள்,
1) முருகன். 2) விநாயகர்.
3) விஷ்ணு. 4) சிவபெருமான்.

38. வர்ணத்தில் இடம்பெற்றுள்ள அங்கங்களின் தொகை,
1) 3 2) 5 3) 4 4) 7

39. ''மூலாதார மூர்த்தி.....'' என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண அவரோகணம்,
1) ஸரிகபதஸ். ஸதபகரிஸ 2) ஸரிமபநிஸ். ஸநிபமரிஸ 3) ஸரிகப்நிஸ். ஸநிபகரிஸ 4) ஸரிமபரிஸ். ஸதபமரிஸ

40. இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகள் பற்றிக் கூறப்பட்டுள்ள நூல்,
1) சங்கிரஹ சூடாமணி. 2) சதுர்த்தண்டிப் பிரகாசிகை.
3) சங்கீத ஸுதாகரம். 4) சங்கீத சாராம்குதம்.

# கர்நாடக சங்கீதம் – II

★ பின்வரும் வினாக்களுள் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
01) அ. கணநாதா குணநீதா...... என்ற வரிகளை உடைய உருப்படியின் வகை யாது?
ஆ. இவ்வுருப்படி அமைந்துள்ள இராகம் யாது?
02) வருட இறுதியில் மாணவர்களின் ஆக்கங்களைக்கொண்ட நிகழ்ச்சிகளை மேடையேற்றும்போது விருத்தியாகும் திறன்கள் இரண்டு தருக.
03) பஸஸஸ என்ற ஸ்ருதி கூட்டப்படும் வாத்தியம் யாது?
04) ஒரு ஸஸப்த லகுவாகவும் நிஸப்த லபுவாகவும் எண்ணிப் போடப்படும் தாள அங்கம் எது?
05) கர்நாடக சங்கீதத்தின் பொற்காலம் எனக் கூறப்படும் காலம் யாது?
06) ஷட்சுருதி ரிஷபம், சுத்த காந்தாரம், ஷட்சுருதி தைவதம், சுத்த நிஷாதம் என்னும் ஸ்வரங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
07) காந்தாரம், பியந்தைக் காந்தாரம், கொல்லி, கொல்லிக் கௌவாணம் என்னும் நான்கு பண்களுக்கு உரிய இராகம் யாது?
08) நரம்பு, தோல், துளை, கஞ்சக் கருவிகள் என்பனவற்றை இணைத்து வாசிக்கப்படும் நிகழ்ச்சி எவ்வாறு அழைக்கப்படும்?
09) சங்கராபரண இராகத்தின் மத்திமத்தைப் பிரதிமத்திமமாக மாற்றினால் வரும் இராகம் யாது?
10) 35 தாளங்களுள் மொத்த அட்சரம் 20 எடுத்துக்கொள்ளும் தாளம் எது?

02. பின்வரும் இராகங்களில் ஏதேனும் ஒன்றிற்கு இலட்சணம் தருக.
1) 8ஆவது மேளம்.
2) மாயமாளவகௌளையில் நேர்பிரதிமத்திம இராகம்.
3) ஹரிகாம்போதி.

03. பின்வரும் உருப்படிகளுள் ஒன்றிற்கு இலட்சணம் தருக.
1) தில்லானா.
2) வர்ணம்.
3) இராககதம்பம் என அழைக்கப்படும் உருப்படி.

04. 1) ''கரணை'' என்னும் பாகம் அமைந்துள்ள வாத்தியம் எது?
2) அவ்வாக்கியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
3) அவ்வாத்தியத்தின் அமைப்பு முறையை எழுதி இவ்வாக்கியத்தை வாசிப்பதில் பிரபல்யம்பெற்ற இருவரின் பெயர்களைத் தருக.

05. 1) தற்போது உள்ள 72 மேளகர்த்தா அட்டவணையை அறிமுகப்படுத்திய நூல் எது?
2) அதனை எழுதிய வாக்கேயக்காரர் யார்?
3) அட்டவணையில் நான்காவது சக்கரத்தின் பெயர் யாது?
4) அச்சக்கரத்தில் இடம்பெற்றுள்ள மேள எண், மேளகர்த்தாப் பெயர், ஸ்வரஸ்தானங்கள் என்பனவற்றைத் தருக.

06. கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, இசைப்பணி என்பவற்றைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விளக்குக.
1) வாழ்க்கைக் காலம், குடும்பம்.
2) கல்வி வளர்ச்சி.
3) இயற்றிய உருப்படிகள் 4 தருக.
4) முத்திரை.
5) இசைப்பணி.

07. "இருபதாம் நூற்றாண்டு தமிழிசை பரவிய காலமாகும்.'' - இக்கூற்றினை ஆராய்க.

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் குழந்தைகளாகப் பிறக்க வேண்டிய பிள்ளைகள் பெண் சிசுக்களாகப் பிறக்கின்றன





## தகவல் பெட்டகம்

பிளாஸ்டிக் மாசு வர்க்கங்கள் கர்ப்பிணித் தாயின் வயிற்றில் வளரும் கருவை பெரிதும் பாதித்து குறிப்பாக அக்குழந்தையின் பாலுறுப்பை மாற்றமடையச் செய்கிறது. எனவே ஆண் குழந்தைகளாகப் பிறக்க வேண்டிய பல பிள்ளைகள் பெண் சிசுக்களாக பிறக்கின்றன எனத் தமது ஆய்வில் தெரிய வந்திருப்பதாக அமெரிக்க தேசிய சூழல் ஆரோக்கிய மத்தியஸ்தான விஞ்ஞானிகள் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

இல்லங்களில் பாவனையிலுள்ள பிளாஸ்டிக் கோப்பைகள், நுகர்வோர் பொலித்தின்பைகள், பொம்மைகள், அழகு சாதனப் பொருள்கள், பிலிம் வகைகள் போன்ற பல்வேறு பிளாஸ்டிக் பொருள்களில் அடங்கியுள்ள சில வகை நச்சுப் பதார்த்தங்களே உணவு வாயிலாக மனித உடலினுள் சென்று இப் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

முன்னர் விலங்குகளில் நடத்தப் பெற்ற ஆய்வில் பிளாஸ்டிக் பொருள்களில் அடங்கியுள்ள 'தலேற்று' என்னும் ஒரு வகை நச்சுப் பொருள் ஆண் விலங்குகளின் பாலுணர்ச்சியை மழுங்கச் செய்வதாகவும் அவற்றைப் பெண் தன்மையடையச் செய்து கருக்கட்டல் ஆற்றல் அற்ற விந்துக்களை உற்பத்தி செய்யத் தூண்டுவதுடன் வயிற்றில் வளரும் கருவிற்கு பால்மாற்றம் செய்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வகை தலேற்றுக்கள், பிளாஸ்டிக் பெட்டிகளில் அடைக்கப்பட்டு வரும் உணவுகள் பிளாஸ்டிக் பைகள் அல்லது பொதி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படும் உணவுவகைகளை உட்கொள்ளும் வேளை உடலில் சென்று பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தலேற்று வர்க்கப் பதார்த்தங்களின் நச்சுத் தன்மையையும், அவை விளைவிக்கும் பாரிய ஆபத்துகளையும் உணர்ந்த பல அரசுகள் அவற்றின் பாவனையைத் தடை செய்திருப்பினும் இன்னமும் பல்வேறு பிளாஸ்டிக் பொருள்கள் தலேற்று மாசுடனேயே காணப்படுகின்றன என அமெரிக்க சூழல் மத்தியஸ்தானம் கூறுகிறது. இவ்வகை மாசு சாதாரண மட்டத்தில் இருந்தாலும் கூட புதிதாகப் பிறக்கும் ஆண் குழந்தைகளின் ஆக்கிரமிப்பு இயல்பு, அரவணைப்புத் தன்மை, நடத்தை, சமுதாயத்துடன் இசைந்து போகும் இயல்பு மற்றும் கற்றல் வேகம் முதலிய இயல்புகள் வெகுவாகப் பாதிப்பிற்குள்ளாகின்றன என அந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

நவீன நாகரிக உலகில் எதற்கெடுத்தாலும் பிளாஸ்டிக் பொருள்கள் என்றவாறு அவை மனித குல வாழ்வில் பின்னிப் பிணைந்து இருக்கின்றன. அவற்றின் நச்சு விளைவு மனித சமுதாயத்தைப் பெரும் அழிவிற்கு இட்டுச் செல்லாதா? எனவே இவ்வகைப் பிளாஸ்டிக் பொருள்களை பாவனையில் கொள்வதை இயலுமான வரை தவிர்த்து பனையோலை மூடல், பெட்டி, பாய், பறி போன்ற இயற்கைப் பொருள்களைப் பாவனையில் கொள்வோம்.






*****

# ஒளி வீசும் மின்மினிப் பூச்சிகள்...



இயற்கையின் அபூர்வ படைப்புகளில் மின்மினிப் பூச்சியும் ஒன்று. ஒளி இருக்கும் இடத்தில் எப்போதும் வெப்பம் இருக்கும்.

ஆனால் மின்மினிப் பூச்சியின் வெளிச்சத்தில் வெப்பம் சிறிதளவும் இருக்காது. மின்மினிப் பூச்சியின் முட்டைகூட ஒளிவீசும் என்பது வியத்தகு விந்தையாகும். சில இரவுகளில் மின்மினிப் பூச்சிகளை அதிகமாக வெளியில் காணமுடியாது. ஆனால் மழை பெய்த பின்னர் இரவு நேரங்களில் நீர் நிலைகளுக்கு அருகில் மின்மினிப் பூச்சிகளை அதிகமாகக் காணமுடியும்.

இவை வண்டு இனத்தைச் சேர்ந்தவை. மின்மினிப் பூச்சி ஒன்றைப் பிடித்து உங்களது உள்ளங்கைக்குள் வைத்துப் பார்த்தால் அதன் அடி வயிற்றுப் பகுதியில் இருந்து விட்டு விட்டு ஒளிகிளம்புவதைக் காணலாம்.

இதனைச் சற்று அழுத்தினாலோ அல்லது அது தாக்கப்பட்டாலோ ஒளி வருகின்ற இடைவெளி நேரம் நாடித்துடிப்புப் போன்று வேகமாக வரும் அதன் உடல் துடிப்புக்கேற்ப ஒளி வரும் வேகமும் அதிகரிக்கின்றது. மின்மினிப் பூச்சிகள் ஒளிவீசுவதில் அபூர்வ சக்தி காணப்படுகிறது.

அது விரும்பும்போது ஒளியைக் கூட்டவோ மங்கச் செய்யவோ அதனால் முடியும். வெளிச்சம் வேண்டாம் என நினைத்தால் விளக்கை அணைப்பது போல் அதன் வெளிச்சத்தை நிறுத்தவும் முடியும். இருட்டில் தனது உடலில் இருந்து வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டு வழிதேடிச் செல்கின்றது. மின்மினிப் பூச்சிகள் எவ்வாறு ஒளி வீசுகின்றன என நோக்கும் போது காஸ் அடுப்பு எரியும் முறையிலேயே மின்மினிப் பூச்சியும் ஒளி வீசுகிறது. இந்தச் செயற்கை முறையில் காஸ் அடுப்பில் இருந்து தொடர்ந்து ஒளி வருகின்றது. ஆனால் மின்மினிப் பூச்சி உயிருள்ள இயற்கையானது இதற்குரிய எரிபொருள் ஒக்சிசனாகக் காணப்படுகிறது. இதன் ஒளி வீசும் உடற் பகுதியில் இரண்டு அடுக்குகளாலான தசை நார்கள் உள்ளன. மேற்பகுதியில் விட்டுவிட்டு ஒளி வீசக்கூடிய பளபளக்கும் தோற்பகுதி உள்ளது. அந்தத் தோலுக்கு அடியில் காற்றுக் குழாய்களும் நரம்புகளும் உண்டு. மின் மினிப்பூச்சி தனக்கு வெளிச்சம் தேவை என நினைக்கும்போது காற்றுக் குழாய்கள் திறக்கின்றன. ஒக்சிசன் மேலேறி வந்து திரிகள் போன்று அமைந்துள்ள மேல் தோலை ஒளிவீசச் செய்கிறது. காஸ் அடுப்பில் சிலிண்டரில் இருந்து வெளிவந்து அடுப்பில் பற்றி எரிவது போன்றதே இது. அந்தச் சமயத்தில் பூச்சி வேகமாக மூச்சு விடும்போது அதன் ஒளி அதிகமாகின்றது.

எதற்காக மின்மினிப் பூச்சி ஒளி விடுகிறது எனப் பார்த்தால் 'விட்டு விட்டு வரும் ஒளி ஒரு காதல் மொழி' ஆண் பூச்சி தரைக்கு மேலே வந்து விட்டு விட்டு ஒளியைச் செலுத்திப் பறக்கும். பெண் பூச்சியானது தரைப்பகுதியில் புற்களுக்கிடையில் காணப்படும். மேலே ஆண் மின்மினி விட்டு விட்டு 'சிக்னல்' போடுவதைப் பார்த்து பெண் மின்மினியும் அதே 'சிக்னல்' கொடுக்கும். பின்னர் இரண்டும் ஒன்று சேர்ந்து காதல் மொழி பேசும்.

மின்மினிப் பூச்சிகளைச் சிலபறவைகள் தங்கள் கூடுகளுக்கு வெளிச்சம் தேவை ஏற்படின் இவைகளைப் பிடித்துச் சென்று கூடுகளில் விட்டு வைக்கின்றன. மின்மினிகளின் முழு வாழ்க்கை பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை நம்மோடு சேர்ந்து வாழும் அதிசயங்களில் ஒன் றாகக் காணப்படுகின்றன. சிறு காலம் பிரகாசித்து பின்னர் மறைந்து போகும் சினிமா நட்சத்திரங்களின் வாழ்க்கையை மின்மினிப் பூச்சிகளோடும் ஒப்பிட்டால் தவறில்லைத் தானே...

தொகுப்பு:-து-ஜெயரூபன், கந்தரோடை

# 23 வருடமாக சுய நினைவில் இருக்கும் "கோமா" மனிதர்



பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர் ரோம்கோபன் (வயது 46) கடந்த 1983 ஆம் ஆண்டு இவர் பயணித்த கார் விபத்துக்குள்ளானது. இதனால் அதை ஓட்டிச்சென்ற கோபனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

எனவே அவர் "கோமா" நிலையை அடைந்தார். உடனே அவரை லண்டனில் உள்ள லியெஜ் நரம்பியல் பல்கலைக்கழக ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அவருக்கு டாக்டர் ஸ்டீவன் லாரீஸ் தலைமையிலான் மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

விபத்து நடை பெற்றதில் இருந்து 23 வருடங்களாக கோமா நிலையிலேயே இருந்தார். இந்த நிலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு டாக்டர்கள் இவரது உடல் நிலையை "ஸ்கேன்" செய்து பார்த்தனர்.

அப்போதுதான் இவர் "கோமா" நிலையில் இருந்தாலும் சுயநினைவுடன் இருப்பது தெரியவந்தது. விபத்து நடந்ததால் இவரது நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு பக்கவாதம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இவரது மூளையில் பாதிப்பு எதுவும் இல்லை . அது நல்ல நிலையில் இருப்பது தெரியவந்தது.

அவர் "கோமா" நிலையில் மயக்க முற்று இருந்தாலும் டாக்டர்களின் பேச்சுகள் மற்றும் சிகிச்சை முறைகளை அறிந்து இருப்பது தெரியவந்தது. இதை அறிந்த நரம்பியல் சிகிச்சை நிபுணர்கள் வியப்பு அடைந்தனர்.

உடனே படுக்கையில் இருந்த அவரை தற்போது சக்கர நாற்காலியில் உட்கார வைத்துள்ளனர். சக்கர நாற்காலியுடன் விசேட கீபோர்டை சேர்த்து கம்பியூட்டர் மூலம் தகவல்களைப் பரிமாறி வருகின்றனர்.

மூளை நன்றாக வேலை செய்வதால் பாதிக்கப்பட்டுள்ள நரம்பு மண்டலத்தை சீரமைக்க சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கோபன், உறுதியான மனம் படைத்தவர். தன்னம்பிக்கை உடையவர். அதனால் தான் "கோமா" நிலையில் இருந்தாலும் சுய நினைவுடன் திகழ்கிறார். மருத்துவ உலகில் இது ஒரு அதிசயம் என டாக்டர் ஸ்டீவன் லாரீஸ் தெரிவித்துள்ளார். ★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ணா



ஸ்ரீ சைத்தன்ய மஹாபிரபு

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே"

என்பது கலியுக துன்பங்களை போக்குவதற்கென உபநிடதங்களிலும் புராணங்களிலும் சிபார்சு செய்யப்பட்ட "மஹாமந்திரம்". இதனை ஓதுவதனால், ஜெபிப்பதால் சேர்ந்து பாடி கீர்த்தனம் செய்வதால் எல்லாவித பாவங்களும் தொலைந்து நல்வழி, விடுதலை கிடைக்கும்.

"ஹரேர் நாமஹரேர் நாம ஹரேர்நாமைவ கேவலம் கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிர் அன்யதா"

என கலியுகத்தில் தோசங்களை நிவர்த்தியாக்க ஹரிநாமத்தை விடவேறு கதியில்லை என்பதையும் வேத உபநிடதங்கள் வலியுறுத்துகின்றன. இதை நடைமுறை வாழ்க்கையில் பயிற்றுவிக்க பகவான் பக்தன் வடிவில் வந்தார். அவரே ஸ்ரீ சைத்தன்ய மஹாபிரபு. அவர் வழியில் வந்து அவரது போதனைகளை பரப்பியவர் ஸ்ரீல பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா. அவரது போதனைகள் ஸ்ரீமத் பகவத்கீதையையும் ஸ்ரீமத் பாகவதத்தையும் பின்பற்றவேண்டுமென்பதே ஆகும்.



ஸ்ரீ ஸ்ரீ ராதா ராஜகோபால்

கொழும்பு புதுச்செட்டித்தெருவில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூலமூர்த்திகள், ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா மூர்த்திகள் இந்தியா - திருமலை - திருப்பதி தேவஸ்தானத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டு தினமும் பக்தர்களின் ஆறுநேர பூசைகளை ஏற்று வேண்டுவார்க்கு வேண்டுவன அருளி அருள்பாலித்து வருகிறார்கள்.



ஆத்மீக குரு அருட்திரு
அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா
அவர்கள்

இந்தியாவின் கல்கத்தாவில் பிறந்தவர். பகவான் கிருஷ்ணாவின் குரு பரம்பரையில் வந்தவர். 1965ம் ஆண்டு அமெரிக்கா சென்று சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகத்தை ஸ்தாபித்து 12 வருடங்களுக்குள் உலகெங்கும் 100க்கு மேற்பட்ட நிலையங்களை ஸ்தாபித்தார். வேத கலாச்சாரத்தை உலகெங்கும் பரப்பினார். 70க்கு மேற்பட்ட நூல்களை எங்களுக்காக விட்டுச்சென்று அதன்வடிவில் எங்களுடன் வாழ்ந்து வருகின்றார்.

# யாழ்நகரில் சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

"என் பக்தி சேவையில் சிறிதளவு ஈடுபட்டு முயற்சித்தாலும் பெரிய ஆபத்திலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள்" (பகவத்கீதை 2-40)

"எல்லாவித தர்மங்களையும் விட்டுவிட்டு என்னிடம் சரணடைவாயாக: நான் உன்னை எல்லா பாவங்களிலிருந்தும் விடுவித்து காப்பாற்றுவேன். தயங்கவேண்டாம்" (பகவத்கீதை 18-66)

"தர்மம் தலைசாய்ந்து அதர்மம் தலையோங்கும்பொழுது பக்தர்களைப் பாதுகாக்கவும் துஷ்டர்களை நிஷ்கரிக்கவும் தர்மத்தை மீண்டும் நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்." (பகவத்கீதை 4-8)

இவ்வாறாக பகவான் உறுதிவார்த்தைகளை திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார். இவற்றையே மையமாகக்கொண்டு ஆன்மீக உணர்வில் வாழ்வதற்கு வழிகாட்டிவருகின்ற சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம் உலகெங்கும் பரவி உன்னத ஆன்மீக சமுதாயங்கள் உருவாகியிருக்கும் வேளையில் பல பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க யாழ் நகரிலும் ஒரு கிருஷ்ண பக்திக் கழகத்தை நிறுவ பகவான் அருளை வேண்டி நிற்கிறார்கள் பக்தர்கள்.

கொழும்பு புதுச்செட்டித்தெருவில் கடந்த 32 வருடமாக இயங்கிவரும் சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் ஆன்மீக சேவையுடன் சமூகசேவைகளையும் ஆற்றி வருவதை யாவரும் அறிவார்கள். வாராந்தோறும் அன்னதானம், கோகுலம் சிறுவர் இல்லம், பாலர் பாடசாலை என்பன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை.

கிருஷ்ண பக்திக் கழகத்தில் ஏற்கனவே ஆயுள் சங்கத்தவர்களாகவும் பக்தர்களாகவும் சேர்ந்தவர்கள் யாழ் பிரதேசத்தில் வசிக்கிறார்கள். அவர்களை உடனடியாக தொடர்பு கொள்ளும்படி வேண்டுகிறோம்.

இந்நிலையில் யாழ்நகரிலும் சேவைகள் புரிய விளைகிறது இக்கழகம். அதற்காக யாழ்நகரிலோ அதற்கு அண்மையிலோ ஒரு தனி வீட்டைத்தேடுகிறது. ஆகவே நன்கொடையாகவோ அல்லது வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ வீடுகள் இருப்பின் தயவுசெய்து இம்முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

ஆலயத் தலைவர்

**சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்**
இல. 188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13.
தொலைபேசி : +94 11 2433325 Fax : +94 11 2471099
E-mail : iskcon@slt.lk Website : iskconsrilanka.com


யாழ்நகரில் புதியதோர் உதயம் .....

டேவிற் பீரிஸ் மோட்டார் கொம்பனி பிறைவேட் லிமிடெட் இன் அங்கிகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

Bajaj





S. J. மோட்டோர்ஸ்

02.12.2009 (புதன்கிழமை) 09.30 – 11.30 மணிவரை உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது என்பதனை மகிச்சியுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்று (2.11.2009) கொள்வனவு செய்யும் பஜாஜ் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக 1500/= பெறுமதியான ஹெல்மட் இலவசமாக வழங்கப்படும்

TP : 021 2224554, 0777 238373

இல : 73, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FLOWERS FAST

The professional Flower Show Room in Jaffna Peninsula

No. 01, New Market inside, Jaffna.

Tel : 021 222 4600
E - Mail : flowersfast@sltnet.lk

Dreams Can Come True Join with us

For a romantic Occations The romantic Venue

### திறப்பு விழா

நிகழும் மங்களகரமான விரோதி வருஷம்,
கார்த்திகைத் திங்கள் 16ஆம் நாள் புதன்கிழமை
(02.12.2009) அன்று
மு.ப 11.00 மணி முதல் 11.30 மணி வரையான
சுப முகூர்த்த வேளையில்

FLOWERS FAST

எனும் புதிய ஸ்தாபனம்
உங்கள் இனிய உறவுகளுக்கு,
உணர்வின் வெளிப்பாடாய்,
புது விதமான வடிவங்களில், பிடித்த விதத்தில்,
பூங்கொத்துகள், மலர்ச் செண்டுகள்,
மற்றும் பரிசுப் பொருட்களைப்
பெற்றுக் கொள்வதற்கான
அழகிய மலர்களின் சாம்ராஜ்யமாக
இல 01, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்
எனும் முகவரியில்......
உங்கள் சந்தோஷமான தருணங்களை.....
உறவுகளுடன் பகிர்ந்திட
நாம் உங்களோடு கை கோர்க்கின்றோம்

உரிமையாளர்
ப்ளவர்ஸ் பாஸ்ற்

We Guarantee Delivery, Beauty & Freshness

ASTA Advt **0718561250**



இந்த கிறிஸ்மஸ் விழாவின்போது உலகில்
பல்வேறுவிதமான கையடக்கத் தொலைபேசிகளில் மிகச்
சிறந்ததைத் தெரிவு செய்து உங்களின்

## பிரியமானவர்களுக்கு அன்பளிப்புச் செய்யுங்கள்

☑ வர்ணம் ☑ வானொலி ☑ இசை ☑ காமிரா

| Model | Old price | Price | Instalment | Instalment |
|---|---|---|---|---|
| LG KP 105 | ~~Rs.4,270/-~~ | Rs.3,970/- | Rs.662x6* | Rs.662x6 |
| LG GB 106 | ~~Rs.4,750/-~~ | Rs.4,399/- | Rs.733x6* | Rs.733x6 |
| LG GB 110 | ~~Rs.7,490/-~~ | Rs.6,990/- | Rs.1165x6* | Rs.583x12 |
| LG KP 175 (2GB Card Free) | ~~Rs.9,990/-~~ | Rs.9,190/- | Rs.1532x6* | Rs.766x12 |
| Motorola W 160 | | Rs.3,650/- | | |
| Motorola VE 538 | Rs.13,990/- | ~~Rs.12,990/-~~ | Rs.2165x6* | Rs.722x18 |
| Philips 9@9U | ~~Rs.12,490/-~~ | Rs.11,750/- | Rs.1958x6* | Rs.653x18 |

*0% வரியற்ற மாதத்தவணை
HSBC, AMEX, BOC, SAMPATH, COMMERCIAL and SEYLAN Gredit Card Holders

EXCLUSIVELY FOR STANDARD CHARTERED CREDIT CARD HOLDERS

யாழ்ப்பாணம்: -B, இல. 31, மானிப்பாய் வீதி- யாழ்ப்பாணம். 021-222 1140
சுன்னாகம்: இல. 160A, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம். 021 -224 0440
சங்கானை: இல 221, பிரதான வீதி, சங்கானை, யாழ்ப்பாணம். 021-4920660
மானிப்பாய்: இல.182/A யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.021-4920655
நெல்லியடி: N.M.M.V வீதி, நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம். 021-2264934
சாவகச்சேரி: இல.105, கண்டி வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம். 021-4920730
ஹொட்லைன் ஹரில்- 0775279995.
நிபந்தனைகள் பொருந்தும். www.abans.lk

Abans
Office Automation (Pvt) Ltd
Genuine Products. Genuine Service



## RAAM SUPER CITY

ராம் சுப்பர் சிற்றி



இன்று 02.12.2009 முதல் உங்களின்
சிறந்த தெரிவுகளுக்கு.....

யாழ்.நகரின் மத்தியில்
இன்று (02.12.2009) புதன்கிழமை
மு.ப.8.30 முதல் 9.50 வரையுள்ள
சுபவேளையில் புதியதோர் உதயம்

### ராம் சுப்பர் சிற்றி

அன்றாட தேவைகளுக்கான அனைத்துப்
பொருள்களையும் இலகுவாகக் கொள்வனவு
செய்திட நாடுங்கள்

### ராம் சுப்பர் சிற்றி

02.12.2009 திறப்பு விழா தினத்திலிருந்து
ஒருவார காலத்திற்குக் கொள்வனவு செய்யும்
அதிஷ்டசாலிகளுக்கு தினசரி கவர்ச்சிகரமான
பரிசுகள் காத்திருக்கின்றன.

- பொதிசெய்யபட்ட மளிகைப் பொருள்கள்
- ஐஸ்கிறீம் வகைகள்
- பழரசங்கள்
- இறைச்சி வகைகள்
- மருந்து வகைகள்
- தரமான சொக்லட் உட்பட
- வகை வகையான தரமான அனைத்துப் பொருள்களையும் பெற்றிட.....
- குளிர்பானங்கள்
- பழ வகைகள்
- சொசேச் வகைகள் (கீல்ஸ்)
- பால்மா வகைகள்

Raam Super City

306, Hospital Road, Jaffna.T.P No: 021 321 5206


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் குருபூசை தினத்தையொட்டி நடைபெற்ற சமய அறிவுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.2

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நடத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**பேச்சுப்போட்டி (கீழ்ப்பிரிவு)**

முதலாம் இடம்- சங்கவி தயானந்தன் (மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்), 2 ஆம் இடம்- கயல்விழி மோகனசேகரன் (மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்), 3ஆம் இடம்- சாரங்கா இராஜேந்திரசர்மா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

**ஆறுதல் பரிசுகள்**

துவாரகா மணிவண்ணன் (வண்ணை மகாவித்தியாலயம்), ஜெயராசா தரணீதரன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ச.துசாலினி (கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்), மோகனராகன் திவ்வியகரன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), தேனுஜன் ஆனந்தராசா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ச.சுஜீவா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்).

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்- சஜானா சிவசுந்தரராசா (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆம் இடம்- பிரியந்தி சந்திரலிங்கம் (வேம்படி உயர்தரப் பாடசாலை), 3ஆம் இடம்- பாஸ்கரநாதசர்மா சிவபானுசுதசர்மா (யாழ்.இந்துக் கல்லூரி).

**ஆறுதல் பரிசுகள்**

தேவதாசன் மாதங்கி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ரவிச்சந்திரன் ரஜீபா (தெல்லிப்பழை, வீமன்காமம் மகாவித்தியாலயம்), ந.விதுர்ஷன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்).

**மேற்பிரிவு**

முதலாம் இடம்- கனகதுர்க்கா கனகரத்தினம் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), உஷாந்தினி சண்முகநாதன் (கிளுவானை ஒழுங்கை, கோப்பாய் மத்தி), கணநாதன் உஷாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**ஆறுதல் பரிசுகள்**

சுகந்தினி சிவாஜிகணேசன் (கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்), கோபிகா நாகலிங்கம் (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), நளாயினி அமிர்தலிங்கம் (கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்).

(50-201)

---

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்களின் சகோதரி திருமதி [illegible] அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம், யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(92677)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 07 . 1960



மறைவு 13 . 12 . 2008

### அமரர் தியாகராசா கணேசலிங்கம்

(கணித ஆசிரியர், யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

திதி: 02.12.2009

அறிவுடனும் ஆற்றலுடனும் மாணவர் மனதில் இடம் பிடித்த அப்பா
ஆண்டு ஒன்றென்ன ஆயிரம் சென்றாலும் மறப்போமா அப்பா!
பண்பாலும் பணிவாலும் மக்கள் சேவை செய்த அப்பா!
பாசத்தோடும் நேசத்தோடும் எங்கள் குடும்பத்தில் இருந்த அப்பா
ஆசிரியத் தொழிலை காலன் பாதி வழியில் பறித்தானே அப்பா!
இவ்வுலகிற்கு எங்களை இயற்பித்த இறைவனே அப்பா!

பண்ணாகம்,
சுழிபுரம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, மனைவி, பிள்ளைகள்.

(92653)

---

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 27 . 04 . 1995



மறைவு 22 . 11 . 1999

### அமரர் தேவராசா நிவேதன்

திதி: பூரணை (02.12.2009) புதன்கிழமை

நித்திக்கும் மொழியால் குளிர்ந்த கதை சொல்லி
பூத்த மலர் போல் புன்சிரிப்பால் குளிரவைப்பாய்
பத்து ஆண்டுகள் பறந்தோடி மறைந்தாலும்
பெத்த வயிறு தினம் பத்தி எரியுதடா நிவேதா!
நித்தம் உன் நினைவால் வாடித் துவண்டாலும் உன்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

உன் பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, சகோதரர் மற்றும் உறவினர்கள்.

(92673)

---

## மரண அறிவித்தல்



### சின்னையா துரைக்குஞ்சு

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா துரைக்குஞ்சு 30.11.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும் யோகேஸ்வரன் (கொழும்பு), யோகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் மெஜிப் பிறோஷா, வித்தியாரோகிணி ஆகியோரின் அன்பு மாமியும் செல்வறட்ணம் (Master), காலஞ்சென்ற சந்திராதேவி ஆகியோரின் சகோதரியும் சோமசுந்தரத்தின் (SLTB கோண்டாவில்) மைத்துனியும் அனித்தா, கஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் பைசர், ஜெனீரா, நிகீஷன், நிதுனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2009) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

484, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.


தகவல்:
செல்வறட்ணம்
(Master).

(92692)

---

## 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 . 11 . 1936



இறப்பு 04 . 12 . 1987

### இராசதுரை பஞ்சாட்சரம்

(ஸ்தாபகர், அருள் முருகன் நகைமாடம், 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

திதி: பூரணை

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணிப்பாதுகாத்து
எம்மை நல்வழிப்படுத்தி
இன்று வானுறையும் தெய்வமாகி
ஆண்டுகள் இருபத்தி இரண்டு சென்றாலும்
உங்களை நாங்கள் மறவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

483, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
157, சாரங்கா நகைமாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(சி/562791)

---

## அரசாங்க அறிவித்தல்

### யாழ்.மாவட்டச் செயலகம்

### வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி விலை கோரல்- 2010

யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான கேள்வி விலை கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும், விண்ணப்பப்படிவத்தினையும் மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக்கிளையில் 03.12.2009ஆம் திகதியிலிருந்து அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப.2.15 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 100 இனைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தலைவர், மாவட்டச் செயலக கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி விண்ணப்பம்- 2010 எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ28.12.2009ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**வாகனங்கள் விவரம்**

* பிக்கப் வான் கார் ஜீப்
* மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டி உழவு இயந்திரம்
* லொறி பவுசர்
  திறந்த பாரவூர்தி (Canter)
* ஏனையவை

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/562839)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பின் பிரபல்யமான பாடசாலைகள் இணைந்து தயாரித்த மாதிரி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

# பரத நாட்டியம் – I

01. சுத்த நிருத்திய உருப்படிகளுள் ஒன்று,
1) ஜதீஸ்வரம். 2) அலாரிப்பு. 3) சப்தம் 4) ஸ்லோகம்.

02. ஆடைகளின் தலைப்பை பிரயோகிக்க பயன்படும் முத்திரை,
1) முஷ்டி. 2) கபித்தம். 3) பதாகம். 4) 1ஆம், 2ஆம் சரி.

03. முதன் முதலில் சஞ்சாரி பாவம் இடம்பெறும் உருப்படி,
1) அலாரிப்பு. 2) ஜதீஸ்வரம். 3) சப்தம். 4) கீர்த்தனம்.

04. மார்பு திரியாங்கங்களில் எப்பிரிவைச் சார்ந்தது,
1) அங்கம். 2) பிரத்தியாங்கம். 3) உபாங்கம். 4) சாத்விகம்.

05. இரு கைகளிலும் முஷ்டி முத்திரைக்குரிய அவதாரம்,
1) வாமண. 2) இராமர். 3) கூர்ம. 4) கல்கி.

06. பூ நூலைக் குறிக்கும் ஜாதி ஹஸ்தம்,
1) வைசிகர். 2) சத்ரியர். 3) பிராமணர். 4) சூத்திரர்.

07. $I_5$ இது குறிப்பது,
1) கண்டம். 2) மிஸ்ரம். 3) திஸ்ரம். 4) சங்கீர்ணம்.

08. சப்தம் என்பதன் பொருள்,
1) ஏழு. 2) தெய்வத்தினை புகழ்ந்து பாடுதல். 3) ரஸம். 4) யாவும் பிழை.

09. உறவுமுறைகள் ரீதியாக வகுக்கப்படும் ஹஸ்தம்,
1) தசாவதாரம். 2) ஜாதி ஹஸ்தம். 3) பாந்தவி ஹஸ்தம். 4) தேவ ஹஸ்தம்.

10. மிஸ்ரஜாதி ஜம்பை தாளத்தின் எண்ணிக்கை,
1) 10 2) 18 3) 9 4) 27

11. பரதநாட்டியத்திற்குரிய வர்ணம்,
1) பதவர்ணம். 2) தாணவர்ணம். 3) பூர்வாங்கம். 4) உத்தராங்கம்.

12. இராம நாடக கீர்த்தனைகளைப் பாடியவர்,
1) பாபநாசம் சிவன். 2) அருணாச்சலக் கவிராயர். 3) கோபாலகிருஷ்ண பாரதி. 4) இளங்கோவடிகள்.

13. 80 வகையான ஆட்டமுறைகளைக் கொண்ட கூத்து வகை,
1) வடமோடி. 2) தென்மோடி. 3) காமன் கூத்து. 4) காத்தவராயன் கூத்து.

14. நீர் கற்ற சப்தம் எக்கடவுளின் புகழ் பாடுவதாக அமைகிறது?
1) முருகன். 2) கிருஷ்ணர். 3) சிவன். 4) பிள்ளையார்.

15. என்ன புண்ணியம் .... என்ற தேவாரம் யாரால் பாடப்பட்டது?
1) அப்பர். 2) சுந்தரர். 3) சம்பந்தர். 4) மாணிக்கவாசகர்.

16. சோழர் காலம் என்பது,
1) கி.மு 12ஆம் நூற்றாண்டு. 2) கி.பி 15ஆம் நூற்றாண்டு. 3) கி.பி 12ஆம் நூற்றாண்டு. 4) கி.பி 6ஆம் நூற்றாண்டு

17. மைத்துனர் என்பதற்குரிய முத்திரைகள்,
1) இடது - மயூரம், வலது - மயூரம்.
2) இடது - சிகரம், வலது - கர்த்தரீமுகம்.
3) இடது - சிகரம், வலது - சிகரம்.
4) இடது - சிகரம், வலது - கபித்தம்.

18. நீர் கற்ற ஜதீஸ்வரத்தின் ராகம்,
1) சாவேரி. 2) வசந்தா. 3) கல்யாணி. 4) பிலஹரி.

19. தந்தத்தினாலான வயலினை பரிசாகப் பெற்றவர்,
1) பொன்னையா. 2) சின்னையா. 3) வடிவேலுப்பிள்ளை. 4) சிவானந்தம்.

20. ''களிமண் அமைப்பு'' எனப் பொருள்படும் வாத்தியம்,
1) தம்புரா. 2) குழல். 3) மிருதங்கம். 4) தாளம்.

21. ''தவுல'' எனும் வாத்தியம் உபயோகிக்கப்படும் நடனம்,
1) கதகளி. 2) ருஹுணு. 3) சபரகமுவ. 4) ஒடிசி.

22. அருணாசலக் கவிராயர் பிறந்த ஆண்டு,
1) 1872. 2) 1804 3) 1711 4) 1710

23. தோடுடைய செவியன் எனப்படுவர் யார்?
1) பிரம்மா. 2) பெருமாள். 3) சிவபெருமான். 4) இராமர்.

24. காம நினைவுகளை ஏற்படுத்துவது,
1) தாமரை. 2) முல்லை. 3) அசோகம். 4) சூதம்.

25. ஏழு தாளங்களிலும் காணப்படும் அங்கம்,
1) லகு. 2) த்ருதம். 3) அனுத்ருதம். 4) புலுதம்.

26. கொஹொம்ப கங்காரியவினைத் தழுவிய நடனம்,
1) கதகளி. 2) மோகினி. 3) மணிப்புரி. 4) கண்டிய நடனம்.

27. பற்களைக் குறிக்க பயன்படுத்தும் முத்திரை,
1) காங்கூலம். 2) சதுரம். 3) சிகரம். 4) மயூரம்.

28. ''புஷ்பகோரகே'' என்பதன் தமிழ்ச்சொல் யாது?
1) கட்டில். 2) பூ கொத்து. 3) பூ மாலை. 4) மலர்க்கூடை.

29. துதம் என்ற சிரசு பிரயோகிப்பது,
1) ஒத்துக்கொள்ளல். 2) இல்லை எனல். 3) குறி பார்த்தல். 4) மலை.

30. ''நாட்டியக்கலை'' என்ற நூலினை எழுதியவர்,
1) டாக்டர் வெ.ராகவன். 2) மிருணாளினி சாரபாய். 3) சோமநாதன். 4) ஆதிவாயிலார்.

31. ஆரோகரா- வேல் வேல் என்று பக்தி ஒலி எழுப்பி ஆடும் நடனம்,
1) கும்மி. 2) கரகம். 3) காவடி. 4) கோலாட்டம்.

32. வாயு பகவானின் வாகனம்,
1) கிளி. 2) செம்மறியாடு. 3) கருடன். 4) கலைமான்.

33. ஸ்ரிகம் என்பது,
1) மத்திய ஸ்தாயி. 2) கீழ் ஸ்தாயி. 3) தார ஸ்தாயி. 4) மேல் ஸ்தாயி.

34. ஐஸ்வர்யக்கடவுளுக்கு உரிய கைகள்,
1) சதுரம் சிகரம். 2) சூசி பதாகம். 3) முஷ்ட அலபத்மம். 4) சூசி கட்வா.

35. நடனமாதின் கதையைக் கூறும் நூல்,
1) சீவக சிந்தாமணி. 2) சிலப்பதிகாரம். 3) நளவெண்பா. 4) கம்பராமாயணம்.

36. ஆய கலைகளின் வகைகள்,
1) 20 2) 64 3) 102 4) 65

37. அண்மையில் காலமான நம் நாட்டில் நாட்டியத்துக்கான பாடல்கள், நாட்டிய நாடகங்கள் ஆகியவற்றை படைப்பதில் புகழ்பெற்ற கலைஞர்,
1) திரு.ஏ.சுப்பையா. 2) திரு.எம்.எஸ்.நவரத்தினம். 3) திரு.ம.கைலாசபதி. 4) பிரம்மஸ்ரீ என்.வீரமணி ஐயர்.

38. தஞ்சை பொன்னையா அவர்கள் பிறந்த ஆண்டு,
1) 1802 2) 1804 3) 1808 4) 1810

39. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் செதுக்கப்பட்ட ஆட்சி காலம்,
1) சோழர் காலம். 2) பல்லவர் காலம். 3) பாண்டியர் காலம். 4) சேரர் காலம்.

40. விறுவிறுப்பான பரதநாட்டிய உருப்படி,
1) அலாரிப்பு. 2) ஜதீஸ்வரம். 3) தில்லானா. 4) சப்தம்.

# பரத நாட்டியம் – II

★ முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் நீர் விரும்பிய 4 வினாக்களுக்கும் விடை தருக.

01. 01) நிருத்திய உருப்படிகள் இரண்டினைப் பெயரிடுக.
02) தொழில்சார் நடனங்கள் இரண்டினைப் பெயரிடுக.
03) கோதோஹனே என்பதன் தமிழ்ச்சொல் யாது?
04) பக்திச்சுவை நிறைந்த உருப்படி எது?
05) ''தரு'' பாடும் வழக்கமுள்ள கூத்து வகை எது?
06) ஜாதி பேதங்களால் மாறுபடும் அங்கம் எது?
07) சதுஸ்ரஜாதி திரிபுடை தாளத்தின் மறுபெயர்?
08) தாளம் எவ்வகையான கருவியினைச் சார்ந்தது?
09) நீர் கற்ற சப்தம் அமைந்துள்ள தாளத்தினை குறிப்பிடுக.
10) இறைவனை வணங்க பயன்படுத்தும் முத்திரை எது?

02. 1) சப்தத்தின் இலட்சணத்தினைத் தருக.
2) சப்தத்தினை இயற்றியவர் யார்?
3) சப்தத்தின் முதன் மூன்று கண்டிகைக்குரிய பாடல்களை இராக தாளத்துடன் வரிக்கிரமமாக எழுதுக.
4) முதலாவது கண்டிகையின் செய்முறையினையும் விவரிக்குக.

03. பின்வரும் முத்திரைகளுக்குரிய விநியோகங்களைத் தருக.
1) சுக துண்டம். 2) பத்மகோஷம். 3) கபோதம். 4) கடஹா வர்த்தனம்.

04. 1) திருப்பாவை நோன்பு என்றால் என்ன? விளக்குக.
2) திருப்பாவை நோன்பு எம்மாதத்தில் அனுஷ்டிக்கப்படும்?
3) திருப்பாவை பாடலினை இராக தாளத்துடன் எழுதுக.

05. சிறுகுறிப்பு எழுதுக.
1) 35 தாளச்சக்கரம். 2) பாத்திரப் பிராணன்.
3) கஞ்சற் கருவி தாளம்.

06. 1) நாட்டியக் கச்சேரிக்கு இன்றியமையாத பிரதான தாள வாத்தியம் எது?
2) அதன் அமைப்பு முறை பற்றி எழுதுக.
3) மிருதங்கத்தின் அமைப்பு முறையினை படம் மூலம் குறித்துக்காட்டுக.

07. 1) இலங்கையில் பயில் நிலையில் உள்ள கூத்து வகைகள் 2 இனைக் குறிப்பிடுக.
2) தென்மோடி கூத்துவகை பற்றி கட்டுரை எழுதுக.

-நிறைவுற்றது-

**O/L மாணவர்களே!**

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் யாழ், கொழும்பு பிரபல ஆசிரியர்கள் தயாரித்த இறுதி மாதிரி வினாத்தாள்கள் நாளை முதல் உங்கள் அபிமான உதயன் கல்விச்சுடரில் வெளிவர வுள்ளன.

* 02/12/2009 - வரலாறு
* 03/12/2009 - ஆங்கிலமொழி
* 04/12/2009 - தமிழ்மொழி
* 05/12/2009 - விஞ்ஞானம்
* 07/12/2009 - வணிகக் கல்வி
* 08/12/2009 - கணிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் மன்னாரில் அமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.02

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடந்த 27ஆம் திகதி மன்னார் ஆங்கிலக் கற்கைநெறி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமது சங்கத்தில் அங்கத்தவர்களாக நீண்ட காலமாக இணைந்து செயலாற்றிவரும் உறுப்பினர்கள் வருமானம் மற்றும் தொழிலின்மை காரணமாக எதிர்நோக்கும் பிரச்னைகள், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இடைநடுவில் கைவிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக சங்கத்தின் பிரதிநிதிகள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

மேலும் அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களை உரிய காலத்தில் அமுல்படுத்துதல், சங்கத்திடம் போதியநிதி வசதியின்மை மற்றும் சங்கங்களை பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் மாதர் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

அனைத்துப் பிரதிநிதிகளினதும் கருத்துக்களை செவிமடுத்த அமைச்சர் மேற்படி தேவைகளை கட்டம் கட்டமாக கூடிய விரைவில் நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தார். (ஒ)


25 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும்....

உதயன்

வடமராட்சி மாணவர்களுக்காக உதயன் நிறுவனம் நடத்தும் மாபெரும் புதிர்ப் போட்டி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஒரு வாரகாலம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இந்தப் போட்டி எதிர்வரும் *டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி* வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் விடைத்தாள்களை பாடசாலைகள் மற்றும் உதயன் முகவர் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள விசேட பெட்டிகளில் சேர்ப்பித்து உங்கள் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யுங்கள்.



பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்



எங்கள் கல்லூரியில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகவும் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியராகவும் தன்னலம் கருதாது சேவையாற்றிவரும்

**திரு.அ.ஜெகதீஸ்வரன்**

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்தி வரவேற்கிறோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்,
காரைநகர்.

(சி/562834)



நன்றியுடன் பாராட்டுகின்றோம்



எம்து பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக இவ்வாண்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் பல்லூடக சாதனம் ஒன்றை வழங்கியமைக்காக மதிப்பார்ந்த நா.உ. **திரு.N.ஸ்ரீகாந்தா** அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு கல்லூரிச் சமூகம்.

(சி/562852)



All Island Winner From
MAHAJANA



J/ Mahajana College
Tellippalai.

Tellippalai Mahajana College in its Victorious Centenary is privileged to congratulate Miss. Daranya Maniseekaran for having won 3rd place in Recitation Gr.5 in National level English Day Competition 2007 conducted in June 2009.

-School Society.



IMMEDIATE VACANCY FOR A TRAINEE MEDICAL REPRESENTATIVE
WALK IN INTERVIEW

DATE: 03.12.2009
TIME: 8.45 AM to 10.45 AM
ADDRESS: Vanikaa Medicals,
No. 48, Hospital Road, Jaffna.
T/P.NO: 0212226291
MOBILE: 0777636148

SIBA HEALTH CARE (PVT) LTD a fast growing pharmaceutical Colombo based company is looking for an energetic and enthusiastic young male to work as a trainee medical representative to be based in Jaffna.

REQUIREMENTS
Preferably A/L with Bio science stream/BUT NOT ESSENTIAL
Age between 18-24.
Previous experience in sales & marketing would be an added advantage, But not essential.
School leavers are encouraged to apply.

REMUNERATION
Attractive salary and other benefits in par with industry standers and excellent career growth based on the performance.

NOTE
Please bring a detailed CV and other certificates along with you.
Please contact on: administration@sibahealth.com.

(92885)


## சர்வதேச ஊனமுற்றோர் தினவிழா யாழ்.மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஊனமுற்றோர் தின விழா நாளை வியாழக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சமூக நலத்துறைத் திணைக்களத்தின் மாவட்டத் திட்ட இணைப்பாளர் ரி.கிருபாகரன், யாழ்.கஜமுகன் ஹாட்வெயார் உரிமையாளர் ஈ.எஸ். பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர்.

அன்றைய தினம் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (50-204)

## வீட்டு மின்னிணைப்பு பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி, டிசெ.2

இலங்கை தொழிற்பயிற்வி அதிகார சபை, வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் வீட்டு மின்னிணைப்புத் தொழிற் பயிற்சியை வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பம் செய்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை கற்றிருப்பதுடன் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சிநெறி 6 மாத காலத்திற்கு வழங்கப்படும். இப்பயிற்சி வகுப்பில் சேர விரும்புபவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், வட்டுக்கோட்டை வீதி, சித்தங்கேணி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (50-100)

## மின் விளக்குகள் இல்லாமையால் இருளில் மூழ்கும் இராச வீதி

யாழ்ப்பாணம், டிசெ.2

வீதி விளக்குகள் பொருத்தப்படாமையினால் கோப்பாய் இராச வீதி இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியூடாகப் பயணம் செய்வதற்கு மக்கள் அஞ்சுகின்றனர்.

இந்த வீதிக்கு மின் விளக்குகள் நீண்ட காலமாகப் பொருத்தப்படவில்லை.

இந்தப் பிரதான வீதிக்கு மின் விளக்குகளை விரைவில் பொருத்தி இரவில் மக்கள் சிரமம் இன்றி போக்குவரத்துச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-224)


இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]
61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி.

(92541)


## குருநகர்ப் பகுதிக்கு மேலும் தொலைபேசி இணைப்புக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.2

குருநகர்ப் பகுதிக்கு மேலும் நூறு தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரெலிக்கொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்கரை வீதிக்கும் குருநகரின் சில பகுதிக்கும் இந்தத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த இணைப்புக்களை வழங்குவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (50-224)


REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்
(நவ.29 - டிசெ.05)

இப்போது விற்பனையில்



தேர்தல் நெருங்க நெருங்க அதிரடி அறிவிப்புகளும் தாராளம்.
வெறும் கையோடு முகாம் வந்தனர்!
ஆழ்கடலில் தத்தளிக்கும் மக்கள்
தமிழர் தாயகமும் தமிழ்க் கட்சிகளும்.
அந்த இறுதி நாள்களில் வன்னியில்....
போகும் இடம் எங்கும் துரத்திய எறிகணைகள்!
யாருடைய கட்டுப்பாட்டில் யாழ்.குடாநாடு.

சிறுகதை, சினிமா, இளஞ்சுடர், பித்தன் பதில்கள் மற்றும் வழமையான பல்சுவை அம்சங்களுடன்.

உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்



3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 15 . 10 . 1953



உதிர்வு: 04 . 12 . 2006

அமரர் நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி
(ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)

பாரினிலே உங்களைப்போல் பண்புடையோர்
இல்லையப்பா!
பாசச்சுமையோடு பரமன்பாதம் பற்றியதேன்?
உள்ளம் எனும் கோயிலிலே உறைந்து நடமாடுகிறீர்
உலகமெனும் மாயையிலே உங்களை நாம்
காண்போமா?


என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

283/13, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(92697)



ஓயாத் துயருடனே ஓராண்டில்



மலர்வு: 10 * 07 * 1960
உதிர்வு: 13 * 12 * 2008

அமரர் தி.கணேசலிங்கம்
(ஆசிரியர், யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி)

மெய்கண்டான் மாதா மேன்மை யுறுவதற்காய்
வையகத்தில் வந்துதித்த சிறந்த நல்லாசானே
அளவிலாப் பணிகளை அர்ப்பணிப்பாய்ப் புரிந்தது
அதிதியாய் விண்ணுலகில் அமர்ந்திட வேண்டுமென்றோ
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எமது மகாவித்தியாலயத்தில்
உம் பெயர் நின்று நிலைத்திருக்கும்.

யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

(92681)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறைக்குப் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித் துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது. 1



## நந்தகுமார் சுபேசன்
### கணிதப்பிரிவு 3ஏ
மாவட்டநிலை-17, தேசியநிலை-169

13 வருட பாடசாலை வாழ்க்கையில் இறுதிப்பரீட்சையான ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் மூன்று அதிவிசேட சித்திகளை பெற்றதை யிட்டு மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். உண்மையான உழைப்பிற்கு நிச்சயம் சிறந்த வெற்றி இருக்கும் என்பதை அனுபவ வாயிலாக அண்மையில் 26ம் திகதி பரீட்சை முடிவுகள் வந்து போது - அம்முடிவுகள் எதிர்பார்த்ததை திருப்திப்படுத்தும் வகையில் அமைந்து போது- உணர்ந்தேன்.

எனது ஆரம்பக்கல்வியை கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் தொடங்கினேன். 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் குறைந்த புள்ளிகளால் சித்தியடைய முடியாது போனது ஏமாற்றமளித்தது. என்றாலும் தரம் 6இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்து மனம் தளராது படித்து வந்தேன். வகுப்பில் எனது திறமையைக் கண்ட ஆசிரியர்கள் எனக்கு ஊக்கம் அளித்தார்கள். ஆசிரியர்களினது ஊக்கத்தினாலும் எனது அன்னையின் அன்பான ஆலோசனைகளாலும் கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மனின் அனுக்கிரகத்தினாலும் ஜீ.சீ.ஈ சாதாரண பரீட்சையில் 9 ஏசி என்னும் பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. உயர்தரத்தில் கணிதத்துறையை தெரிவு செய்து கற்று 3 ஏ பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

உயர்தரப் பரீட்சைக்காக 21/2 வருடங்களாக ஊண் உறக்கமின்றி படித்ததாக கூறிக்கொள்வதை விட படித்தவற்றை உடனடியாகவே மீட்டுக் கொண்டேன் என்பதே உண்மையாகும். பரீட்சை நோக்கில் எவ்வாறு எழுத வேண்டும் என கடந்த கால வினாத்தாள்களைச் செய்து பார்ப்பதன் மூலமும் எனது பாடசாலை ஆசிரியர்களினது வழிகாட்டலின் மூலமும் தெரிந்துகொண்டேன். நாளாந்தம் சராசரியாக 6 மணித்தியாளங்களை வீட்டில் இருந்து கற்பதற்கு ஒதுக்கிக் கொள்வேன் வினாக்களில் வரும் சந்தேகங்களை என்னுடைய நண்பர்களிடம் கேட்டுத் தீர்த்துக் கொள்வேன்.

தந்தையார் காலமாகிவிட்ட பின்னர் தன்னை உருக்கி என் வாழ்விற்கு ஒளிதந்த எனது அன்னைக்கும் என்னுடைய இருகைகளாக இருந்து கொண்டிருக்கும் எனது சகோதரர்கள் இருவருக்கும் முதலில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கோயிலாக இருந்த எனது பாடசாலைக்கும் அங்கு கூடியிருந்த தெய்வங்களான ஆசிரியர்களிற்கும் கூறக்கூடிய நன்றிகள் வார்த்தையில் அடங்காது. நான் கற்ற தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களிற்கும்என்னுடைய நண்பர்களிற்கும் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினருக்கும் மிகுந்த நன்றிகள்.

**செவ்வி : ஒளவியன், விக்ரோரி**

எனது கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர், பிரதிஅதிபர்,முன்னாள் அதிபர், முன்னாள் பிரதி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைக் கூறிக் கொண்டு எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வந்து எனது பாடசாலைக்கு சேவைகள் பலவும் செய்ய விரும்புகிறேன்.



## பத்மநேசன் பிரகாஷ்
### உயிரியல் 3ஏ
மாவட்டநிலை-02, தேசியநிலை-69

சிறப்பான கற்றலுக்கு மிக முக்கியமானது சூழல் இதற்காக அமைதியான சூழலை ஏற்படுத்தி, என்னுடைய கற்றல் நடவடிக்கைகளை மேம் படுத்துவதில் அரும்பாடுபட்டனர் எனது பெற்றோர்.

அத்துடன் சிறதளவு கற்றாலும், அதனை மனதில் நன்கு பதியக் கூடியவாறு கற்பேன். மேலும் படித்தவற்றைத் தினமும் மீட்டுப் பார்ப்பேன். இலையே எனது வெற்றிக்கு காரணமாக அமைந்தன.

என்னுடைய சிறப்பான பெறுபேற்றுக்கு வழிசமைத்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், பெற்றோர், சகோதரர்கள் நண்பர்கள் ஆகியோரை இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவில் கொள்கின்றேன்.எதிர்கால இலட்சியம் வைத்தியராக வரவேண்டும் என்பதானும்.



## லிங்கேஸ்வரன் நரேஸ்குமார்
### கணிதப்பிரிவு 3ஏ
மாவட்டநிலை-09, தேசியநிலை-79

பாடசாலைக் கல்வியில் வாழ்க்கைக்கு எத்தனையோ நல்ல விடயங்களை நாம் எடுத்துக்கொள்கின்றபோதும் ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் 3 அதிவிசேட சித்திகளைப் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். படிக்கும் நேரம் குறைவாக இருந்த போதும் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் சந்தர்ப்பத்தில் சிறிதளவாவது கிரகித்துக் கொள்வதாலும் அதனை வீட்டில் உள்ள போது மீட்டுக் கொள்வதாலும் பரீட்சையை நம்பிக்கையுடன் எதிர் நோக்கக் கூடியதாக இருந்தது.

தரம் 8 வரை கொழும்பு, பம்பலபிட்டி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றேன். அங்கு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைய பெரிதும் உதவிய ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துகொள்கிறேன். பின்னர் தரம் 8 லிருந்து எனது கல்வியைக் கொக்குவில் இந்துக்கல்லூரியில் தொடர்ந்தேன். அங்கும் சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் 8ஏ2பி எடுக்க பெரிதும் உதவிய அதிபர், ஆசிரியர்களிக்கு எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன். தொடர்ந்து உயர்தரத்தில் அதிவிசேட சித்திகளைப் பெறப் பெரிதும் உதவிய அதிபர், பிரதிஅதிபர், முன்னாள் அதிபர் முன்னாள் பிரதிஅதிபர் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்களிற்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மையான நண்பர்களாக இருந்த மிக உன்னதமான எனது பெற்றோரிற்கும் எனது வாழ்க்கைக்கு தூணாக இருந்த எனது அக்காவிற்கும் தம்பிக்கும் முதலில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதிநேரம் வரை எமக்கு முழுமூச்சாக கல்வி கற்பித்த எனது பாடசாலைக்கும் அதிலும் குறிப்பாக எம்மை சுதந்திரமாக செயலாற்றவும் எம்முடைய நலனைப் பற்றியே எப்போதும் நினைத்திருந்த மிகச்சிறந்த ஆசிரியர்களிடம் கற்கக்கூடிய வாய்ப்பையும் எனது பாடசாலையில் கற்றபோது பெனக்கூடியதாக இருந்தது. உலகில் எத்தனையோ வைரங்கள் இருந்த போதும் அவை பட்டைதீட்டிய பின்னரே ஒளி பெறுகின்றன. நான் வெறும் கூழாங்கல்லாக இருந்த போதும் என்னையும் வைரங்களிற்கு மத்தியில் நிலைநிறுத்திய நான் ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்விவரை கல்வி கற்பித்த அனைத்து ஆசிரியர்களையும் எண்ணிப் பார்த்து பெருமையடைகின்றேன். இதேவேளை சாதாரணதரம், உயர்தரம் என்பவற்றில் நான் கற்ற தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களிற்கும், நண்பர்களிற்கும், உறவே இல்லாத போதும் உதவிசெய்த உள்ளங்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எதிர்காலத்தில் நான் ஒரு சிறந்த பொறியியளாராக வந்து சமூகத்திற்கு உதவிட பெரிதும் விரும்புகிறன்.




## தங்கவேல் உஷானி
### கலைப்பிரிவு 3ஏ
மாவட்டநிலை - 01

தரம் -1 முதல் 13 வரை எனது கல்வியை யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கற்றுக்கொண்டேன். ஜி.சீ.ஈ உயர்தரத்தில் எனது விருப்பின் பேரில் கலைப்பிரிவில் தமிழ், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன். தற்போது 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றதையிட்டு பெரும் மனமகிழ்ச்சி அடைகின்றேன். எனது இவ் வெற்றிக்குப் பக்க பலமாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், குடும்பத்தினர் மற்றும் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறைவனின் ஆசியுடன் எனது இலக்கை அடைய தொடர்ந்தும் முயற்சி செய்வேன்.



## சிவராஜா றம்யா
### கலைப்பிரிவு 3ஏ
மாவட்டநிலை - 05

நான் எனது ஆரம்பக்கல்வி, உயர்கல்வி அனைத்தையும் யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கற்றுக்கொண்டேன். உயர் கல்விக்காக கலைப்பிரிவைத் தேர்வு செய்து தமிழ், அரசியல், வரலாறு ஆகிய பாடங்களைப் பயின்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் ஐந்தாமிடத்தைப் பெற்றுக் கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இவ் வெற்றிக்கு காரணமான அதிபர், ஆசிரியர்கள், குடும்பத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறுவயது முதலே சட்டத்துறையில் ஈடுபடுவதை இலட்சியமாகக் கொண்ட நான் அவ் இலக்கை அடை இறைவனின் ஆசியுடன் தொடர்ந்தும் முயற்சி செய்வேன்.



'ஐஸ் லான்ட்'ஐஸ் தொழிற்சாலை திறப்பு விழா மவுண்ட் கார்மேல் வீதி யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். இந்நிகழ்வில் மாதகல் பங்குத் தந்தை அருட்திரு ஆனந்தகுமார் அடிகள் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும், யாழ் மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் நாடா வெட்டி தொழிற்சாலையினை திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் தொழிற்சாலை உரிமையாளர் ஜி.சுரேஸ் ஐஸ் விற்பனையை ஆரம்பித்து வைப்பதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: உமா, அனுஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L முடிவுகளால் உங்கள் பட்டப்படிப்பு கனவுகள் கலைந்ததா?
கவலையை விடுங்கள்.
உங்கள் வளமான எதிர்காலத்திற்கு வழிகாட்டவே நாம்!

BIT University of Colombo School of Computing
3 வருட கற்கை நெறி.
ஒவ்வொரு ஆண்டிற்குமான பாடநெறிகளைப் பூர்த்தி செய்வோருக்கு சான்றிதழ்கள் கொழும்புப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.

HND edexcel in Computing
Free: Pentium 4 System



O/L தகைமையுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் BIT பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியுமா? ஆம்!
FIT Foundation in Information Technology ஆல் உங்கள் கனவுகள் நனவாகும்
University of Colombo School of Computing

bcs BCS British Computer Society
கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின் M.Sc பட்டப்படிப்புகளை மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தொடரலாம்.

Sun Certification for Java | Network Administration Linux | MCITP / MCTS Microsoft | CCNA Cisco
ICT-GIT | ICDL International Computing Driving Licence | After A/L Students DiTEC | Dip in Computerized Accounting | E

அனைத்துக் கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்:
06-12-2009 & 07-12-2009

ESOFT
Jaffna Branch: 114, Navalar Road, Jaffna. T.P- 0212224142
Nelliady Branch: 153,Jaffna Road, Nelliady T.P- 0212264940


## அடைமழையால் வீதிகள் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ.02

குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக பெரும்பாலான வீதிகளில் புதிதாக பள்ளங்கள் தோன்றியுள்ளன. இதனால் இவ்வீதிகளில் பயணிப்போர் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது. யாழ். நகரை அண்டிய பிரதான வீதிகள் பலவும் இவ்வாறு மழை காரணமாகக் குண்டும் குழியுமாகக் காட்சியளிப்பதைக் காணமுடிந்தது. (4-9)


MIS ICT ICT ICT ICT
Computer Center #74, சுபாஷ் வீதி தலையாழி யாழ்ப்பாணம். TPNO: 021 321 6083, 0776577359
Grade 10
05.12.2009 at 11.30 am - Tamil Medium
06.12.2009 at 11.30 am - English Medium
புதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளவும்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஒரு பிரிவில் 15 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்
Grade 11
02.12.2009 at 5.00 pm - Tamil Medium
03.12.2009 at 6.00 am - Tamil Medium
04.12.2009 at 3 pm / 4 pm- English Medium
For Grade 10 / 11
மாணவர்களுக்குத் தனித்தனியான வசதியான நேரங்கள்
By R.Kumaran - B.Sc.


## மரண அறிவித்தல்

### நாகமணி விஜயரத்தினம் (உடையார்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து, தற்போது டென்மார்க்கில் வசித்தவரான நாகமணி விஜயரத்தினம் (உடையார்) 28.11.2009 சனிக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் நாகமணி-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, சரஸ்வதி, மகேஸ்வரி, செல்வரத்தினம் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுமதி (டென்மார்க்), இரஜனி (ஜேர்மனி), ஜெயகாந்தன் (பிரான்ஸ்), வனஜா (பிரான்ஸ்), சுரேஸ் (பிரான்ஸ்), கிரிஜா (இத்தாலி), சுதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமார் (டென்மார்க்), நாகேந்திரம் (ஜேர்மனி), தட்ஷனா (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), பிரசாந்தி (பிரான்ஸ்), குமணன் (இத்தாலி), சிவகௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் தர்சன், அனுதா, தர்சனா, அனோஜன், நிஷாந்தினி, அனுசியா, கீர்த்தனா, ஆதித்தன், நிரோஜன், நிசாந்தினி, அனுசியா, ரசிக்கா, கரிஷன், ஆருஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.12.2009) புதன்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.
தொ.பே: 0045 98510647
டென்மார்க்.

தகவல்:
து.நடனகுமார்.

(92694)

## நெஞ்சுருக்கும் ஈராண்டு நினைவலைகள்



### டாக்டர் திருமதி குணரஞ்சிதம் குகதாஸ்

அன்புள்ள அம்மாவிற்கு!

கார்த்திகை விளக்கிட்டில்
வீடெங்கும் ஒளிவீசும்
எம் குலத் தீபம்- அந்தோ
இருளடைந்து ஈராண்டு.

பகல் இரவு பாராது
பாசத்தால் அரவணைத்து
வைத்தியராய் நாம் சிறக்க
பல நன்மை காட்டிவைத்து
பார் சிறக்க வாழுகையில்
காலனவன் கவர்ந்தானோ!!

கதைகள் பல உள்ளதம்மா
கதைத்துப் பேசி மகிழ்ந்திருக்க
வீடு வந்து போங்களம்மா-வீடும்
வெறிச்சோடிப் போய்க்கிடக்கு

திக்கெட்டுத் திசைகளிலும்
தேடியே அலைகின்றோம்
ஆண்டுக்கு ஒரு மடலும்
அனுப்பியும் வைக்கின்றோம்.

மடல் இது இரண்டம்மா
பதில் இன்னும் காணவில்லை
இம்மடல் கண்டேனும்
பதில் ஒன்று போட்டுவிடுங்கள்.

அன்னை மடியில் : 31.10.1950

ஆண்டவன் அடியில்: 25.11.2007

திதி : 02.12.2009

பாசத்துடன் :
கணவர்,மகன்,மகள்.

11, 2/6
42 ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீதியமைக்கும் பணியைத் தடுத்துநிறுத்தி**

# இந்திய எல்லைப் பகுதியில் மீண்டும் சீனா அத்துமீறல்

லெஹ், டிசெ.2

இந்திய எல்லைப் பகுதியில் சீன நாட்டு இராணுவம் மீண்டும் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளது.

இந்தியா - சீன எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே இந்தியப் பகுதியில் இரு கிராமங்களை இணைப்பதற்காக அமைக்கப்பட்ட வீதியை சீன இராணுவம் தடுத்து நிறுத்தி இந்த அத்துமீறல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்திய எல்லைப் பகுதியில் சீனா அடிக்கடி அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. காஷ்மீர் மாநிலம், லெஹ் மாவட்ட தலைநகரில் இருந்து 300 கிலோ மீற்றர் தூரத்தில், தேசிய கிராமப்புற வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் வீதி அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. இந்திய - சீன எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே இந்தியப் பகுதியில் இரு கிராமங்களை இணைப்பதற்காக இந்த வீதி அமைக்கப்பட்டு வந்தது.

3.8 கிலோ மீற்றர் தூரத்துக்கு வீதிப்பணி முடிவடைந்த நிலையில், அது சர்ச்சைக்குரிய பகுதி என்று சீன இராணுவத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், அங்கு வீதியமைக்கும் பணி நிறுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு தகவல் தெரிவித்து இருக்கிறார் என காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்தார்.

லடாக் சுயாட்சி கவுன்சிங் தலைமை நிர்வாகி செர்ரி டோர்ஜிங்கும் இந்தத் தகவலை உறுதி செய்தார்.

சமீபத்தில் இந்திய எல்லைக்குள் ஊடுருவி, பாறைகளில் சீன மொழியில் வாசகங்களை எழுதிச் சென்ற அதே பகுதியில் மீண்டும் இந்த அத்துமீறலில் சீன இராணுவம் ஈடுபட்டிருக்கிறது என அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை குறித்து விசாரணை நடத்தப்படும் என்று இராணுவத்துறை இராஜாங்க அமைச்சர் பல்லம்ராஜூ அறிவித்தார்.

# 'நாம் தமிழர்' இயக்கத்தை அழிக்க விஷமிகள் திட்டம்

**அக்கினிப்புயல் சீமான் சீற்றம்!**



சென்னை, டிசெ.2

'நாம் தமிழர்' இயக்கத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே எம் மீது பொய் வழக்குப் போடப்பட்டுள்ளது. இளங்கோவனின் வீடு மீது குண்டு வீசப்பட்ட விவகாரத்தில் எமது இயக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று நிரூபிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

- இவ்வாறு 'நாம் தமிழர்' இயக்கத்தின் தலைவரும் ஈழ ஆதரவாளருமான சீமான் ஆவேசமடைந்துள்ளார்.

சென்னை அடையாறு இந்திரா நகர் 10 ஆவது குறுக்குத்தெருவில், முன்னாள் மத்திய அமைச்சர் இளங்கோவனின் வீடு உள்ளது. மூன்று நாள்களுக்கு முன்னர் இரவில் மர்ம நபர்கள் பெற்றோல் குண்டுகளை வீசினர்.

இதுதொடர்பாக அடையாறுப் பொலிஸார் வழக்குப் பதிந்து, சினிமா இயக்குநர் சீமான் தலைமையில் இயங்கும் 'நாம் தமிழர்' இயக்கத்தைச் சேர்ந்த மித்திரன், மணி, அருண் ஆகிய மூவரையும் கைதுசெய்தனர். மேலும் இந்த வழக்கில் தேடப்பட்ட விஜயகுமார் என்பவர் நேற்று சென்னை மாஜிஸ்திரேட் நீதிமன்றில் சரண் அடைந்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே சீமான் மேற்கண்டவாறு ஆவேசமடைந்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இளங்கோவனின் வீடு மீது தாக்குதல் நடந்தது எனக் கூறப்படும் நேரத்தில், அந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் என்னை வரவேற்பதற்காக சென்னை விமான நிலையத்தில் என்னுடன் இருந்தனர். இதற்கான வீடியோ ஆதாரங்கள், புகைப்படங்கள் என்னிடம் இருக்கின்றன.

சென்னை விமான நிலையத்தில் இருந்து எனது வீட்டுக்குப் போகும் வழியில், காரை மறித்து அவர்களைக் கைதுசெய்துள்ளனர். ஆகையால் நாம் தமிழர் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது. குண்டு வீசப்பட்ட விவகாரத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு சம்மந்தம் இல்லை என்று நிரூபிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் - என்றார்.

# இந்தியச் செய்திகள்

# நாகைக் கடலில் 4 மீனவர் மாயம்!

நாகை, டிசெ.2

நாகையில் கடந்த 28ஆம் திகதி கடலுக்குச் சென்ற மீனவர்கள் 4 பேர் இதுவரை கரை திரும்பவில்லை. அவர்களைத் தேடும் பணியில் மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

வங்கக் கடலில் இலங்கைக்கு அருகே புதிதாக உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகத்தில் கடற்கரைப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. நாகை மாவட்டத்தில் பல இடங்களில் 3ஆவது நாளாக நேற்றுமுன்தினமும் மழை பெய்தது. நாகை, வேதாரண்யம், சீர்காழி, மயிலாடுதுறையில் விடிய விடிய மழை பெய்தது. காரைக்கால் மாவட்டத்தில் பகலில் மழை பெய்தது.

நாகையில் கடல் சீற்றம் தணியாதமையால் 2ஆவது நாளாக நேற்றும் நாகையை சேர்ந்த சுமார் ஒரு லட்சம் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. காரைக்கால் மாவட்டத்தில் நாட்டுப்படகு, விசைப்படகு மீனவர்கள் நேற்று கடலுக்கு செல்லவில்லை.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் இருந்து சக்திவேல், சேகர், சௌந்தரராஜன், முனியன் ஆகியோர் கடந்த 28ஆம் திகதி, பைபர் படகில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். அன்று மாலை 6 மணிக்குள் அவர்கள் கரைதிரும்ப வேண்டும். ஆனால், இதுவரை 4 பேரும் கரை திரும்பவில்லை. அவர்களைத் தேடும் பணியில் மீனவர்கள் மற்றும் மீன்வளத் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

# எய்ட்ஸ் பாதித்த 1,000 குழந்தைகளை தத்தெடுக்கிறார் நடிகர் கமல்ஹாசன்

சென்னை, டிச. 02

எய்ட்ஸ் நோய் பாதித்த ஆயிரம் குழந்தைகளை நடிகர் கமல்ஹாசன் தத்து எடுக்கிறார்.

உலக எய்ட்ஸ் தினம் நேற்று (டிச. 1) கடைப்பிடிக்கப்பட்டது. எய்ட்ஸ் நோய், குழந்தைகளை மிக எளிதாகத் தாக்குகிறது. நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில்தான் எய்ட்ஸ் நோய் அதிகமான குழந்தைகளைப் பாதித்துள்ளது. தமிழகத்தில் 2,651 குழந்தைகள் இந்த ஆண்டு புதிதாக எய்ட்ஸ் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர்.

இத்தகைய குழந்தைகள் தாங்கள் செய்யாத தவறுக்காக சமுதாயத்தால் புறக்கணிக்கப்படும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.



எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவாக, 'பெற்றால்தான் பிள்ளையா?' என்ற தலைப்பில் ஒரு மாதகால பிரசார இயக்கத்தை பி.எஸ்.ஐ. என்ற அரச சார்பற்ற அமைப்பும், தமிழ்நாட்டின் முன்னணி எவ்.எம். வானொலியுமான ஹலோ எவ்.எமும் இணைந்து தொடங்கியுள்ளன.

இந்தப் பிரசார இயக்கத்துக்கு நடிகர் கமல்ஹாசன் ஆதரவு தெரிவித்துள்ளார். அவர் எய்ட்ஸ் பாதித்த ஆயிரம் குழந்தைகளை தத்து எடுக்கிறார் என அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு-

குழந்தைகள்தான் நமது எதிர்காலம். ஆனால் அவர்களில் சிலர் நம்பிக்கையின்மையின் பிடியில் சிக்கியிருப்பது கவலை அளிக்கிறது. அவர்களுக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் அளிப்பது நமது கடமை, பொறுப்பு. ஆகவே, இந்தப் பிரசார இயக்கத்துக்கு தலைமை தாங்குவது எனக்கு ஆழ்ந்த திருப்தியளிக்கிறது. என்னைப் பின்பற்றி பலரும் இச்சேவையை செய்வர் என்று நம்புகிறேன்.

என்னை விட சிறந்தவர்களும், வசதியானவர்களும் இருக்கிறார்கள். நான் ஒரு இயக்கத்தை மட்டுமே தொடங்கி இருக்கிறேன் மற்றவர்கள் இதை முன்னெடுத்து செல்வார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பிரசார இயக்கத்தைத் தொடங்கியுள்ள ஹலோ எவ்.எம். வானொலியையும், பி.எஸ்.ஐ. அமைப்பையும் பாராட்டுகிறேன் - என்றார்.

# ஈழத் தமிழர் அஞ்சலி பதாதைகளைக் கிழித்த இளங்கோவன் மீது நடவடிக்கை எடுக்குக

**பழ. நெடுமாறன் வலியுறுத்து**

சென்னை, டிசெ.2

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மீது முதல்வர் கருணாநிதி நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களே அவரை அடக்கும் நிலை உருவாகும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த பதாதைகளையும் சுவரொட்டிகளையும் கிழித்தெறிந்து பகிரங்கமாக நடத்தப்பட்ட அராஜகத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.



சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு கலவரத்தில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்ய வேண்டிய முதல்வர் கருணாநிதி, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது கண்டிக்கத்தக்கது.

தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசுவது சட்டப்படி குற்றமல்ல என்று மாவட்ட நீதிமன்றங்கள் முதல் உச்ச நீதிமன்றம்வரை பல தீர்ப்புகள் வழங்கியுள்ளன. அதனை மதிக்காமல் நடந்து கொண்டவர்கள்தான் நீதிமன்றத்தை அவமதித்தவர்களாகின்றனர்.

ஈழத் தமிழர்கள் விடயத்தில் காங்கிரஸ் தலைமை செய்த தவறுகள் காரணமாகவே ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இதனை உணராத இளங்கோவனின் செயல்கள் தமிழகத்தில் காங்கிரஸை குழிதோண்டி புதைத்துவிடும். தமிழகத்தின் அரசியல் பண்பாட்டின் இலக்கணமாகத் திகழ்ந்த ஈ.வெ.கி. சம்பத்தின் நற்பெயருக்கு இளங்கோவனின் செயல் பெரும் இழுக்கைத் தேடித்தந்துள்ளது.

இத்தகைய செயல்களை முதல்வர் கருணாநிதி வேடிக்கை பார்ப்பாரேயானால் மக்களே முன்வந்து அவற்றை அடக்கும் நிலை உருவாகும் - என்றார்.

# மேற்கு வங்கத்தில் மின்சாரக் கட்டணம் உயர்வு பா.ஜ.க. கடையடைப்பு; வெடித்தது வன்முறை!

**ரயில்கள் சிறைப்பிடிப்பு; பஸ்கள் எரிப்பு**



கொல்கத்தா, டிச. 02

மேற்கு வங்கத்தில் மின்சாரக் கட்டணம், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து பா.ஜ.க. நடத்திய முழு அடைப்புப் காரணமாக பல்வேறு பகுதிகளில் வன்முறை டிெத்தது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. சில இடங்களில் பஸ்கள் எரிக்கப்பட்டன.

மேற்கு வங்கத்தில் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதைக் கண்டித்து பா.ஜ.கட்சி சார்பாக நேற்றுமுன்தினம் 12 மணி நேர முழு அடைப்பு அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக கொல்கத்தா, வடக்கு 24 பர்கானா, ஹவுரா போன்ற பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. பஸ், ரயில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

கொல்கத்தாவில் விமான நிலையத்துக்கு செல்லும் பரபரப்பான வீதியில் ஒரு தனியார் பஸ் தீ வைத்து எரிக்கப்பட்டது. அந்த வீதி முழுவதும் தடுப்புகளை வைத்து பா.ஜ.க. தொண்டர்கள் அடைத்து வைத்தனர். வடக்கு 24 பர்கானா மாவட்டத்தில் உள்ள அகர்பாரா ரயில் நிலையத்தில் கங்காசாகர் எக்ஸ்பிரஸ் என்ற ரயிலை சிறைப்பிடித்தனர்.

ஹவுரா மாவட்டத்தில் 12 நகர பஸ்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. ஹவுரா - ஷீல்டா ரயில் நிலையங்களுக்கு இடையே தண்டவாளம் பெயர்க்கப்பட்டதால் ரயில் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. கொல்கத்தா மற்றும் ஹவுரா நகரங்களில் பாடசாலை, கல்லூரிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அடைக்கப்பட்டன.

ஹவுரா நகரில் இருந்து கொல்கத்தா நோக்கிச் சென்ற அரச பஸ்ஸுக்கு வன்முறையாளர்கள் தீ வைத்தனர். தீயணைப்புப் படையினர் வருவதற்குள் அந்த பஸ் முழுவதும் எரிந்து சாம்பலானது. இந்தச் சம்பவத்தில் யாரும் காயமடையவில்லை. இதுதவிர ஏராளமான பஸ்கள் அடித்து நொறுக்கப் பட்டன.

# சிதம்பரத்தை பதவி விலகச் சொல்ல ஜெயலலிதாவுக்குத் தகுதி இல்லை

சென்னை,டிசெ. 02

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தைப் பதவி விலகுமாறு கூற ஜெயலலிதாவுக்குத் எந்தத் தகுதியோ, உரிமையோ இல்லை - என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் நேற்றுமுன்தினம் கூறியவை வருமாறு -

லிபரான் கமிஷன் அறிக்கை கசிந்ததற்கும் தனக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை என்று உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெளிவுபடுத்தியுள்ளார். ஆனாலும் அவர் பதவி விலக வேண்டும் என ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். காழ்ப்புணர்ச்சி காரணமாக, எதற்கெடுத்தாலும் சிதம்பரம் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று அவர் கூறிவருகிறார்.

சிதம்பரம் மிகவும் திறமையான அமைச்சர். பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர். அவரைப் பதவி விலகுமாறு சொல்ல ஜெயலலிதாவுக்கு எவ்விதத் தகுதியும் இல்லை, உரிமையும் இல்லை.

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து வலியுறுத்தினோம். அதன்படி தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை காங்கிரஸ் ஆதரிக்காது. இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே காங்கிரஸின் நிலை.

காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர் சேர்ப்புக்கு டிசெம்பர் 20ஆம் திகதிவரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் மேலிடம் நியமித்துள்ள தேர்தல் பொறுப்பாளர்கள், தேர்தல் அட்டவணையை வெளியிடுவார்கள். அதன்படி கிளை, வட்டார, நகர, மாவட்டம் மற்றும் பல நிலைகளில் சுதந்திரமாகவும், ஜனநாயக ரீதியாகவும் தேர்தல் நடைபெறும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 - 12 - 1922

உதிர்வு 15 - 11 - 2005

அமரர்

**சபாபதிப்பிள்ளை மாரிமுத்து**

(Retired Jaffna Co-Op Manager)

திதி: பூரணை

பாசமுடன் எம்மை வளர்த்து
பரிவுடன் வழிகாட்டிய
பாசமிகு அப்புவே
ஆண்டுகள் நான்கு என்ன
நாற்பது ஆனாலும் என்ன
நானிலம் உள்ளவரை
நாம் உம்மை மறவோம் அப்பு!

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(92588)


## மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாதாந்த பொதுசன உதவிப்பணக் கொடுப்பனவு பெறுவதற்காக சமூகசேவை திணைக்களத்திற்கு விண்ணப்பித்த மீள் குடியேறியவர்கள் உட்பட அனைவருக்குமான கொடுப்பனவுகள் திணைக்களத்தால் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பித்தவர்கள் தத்தமது கிராம அலுவலர்களிடம் மாதாந்த பொதுசன உதவிப் பண அட்டையைப்பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா தெரிவித்துள்ளார். (50-112)


TELESONIC | SUNDA | FIVE STAR | RICH STAR | MID SUMMER

Table Fans, Stand Fan's, Ceiling Fan's, Wall Fan's, Exuast Fan's, Orbit Fan's
Mixer Grinder, Gas Cookers, Ceramic Ware, Enamelware, Rice Cookers, Oven's
DVD, TV, Blender's, LED Torches, Iron's, Airports Toasters, Pressure Lantern

(And MIMI Brand Vacuum Flasks 8 Models)
......many more items......

Reasonable & Affordable Price | For wholesale & Retail

**IZZY ENTERPRISE (PVT) LTD**
155/7, Prince Street, Colombo-11
Tel : 0777814117
Fax : 2437843



# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 731
சீட்டிழுப்பு திகதி 30.11.2009

எழுத்து: E

வெற்றி இலக்கங்கள்: 06 09 15 22

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெற்றியாளர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,904,052.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 317 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 653 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 15778 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9109 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 224571 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35316 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,878,000.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 21,536,743.20

செப்டெம்பர் 01ம் திகதியிலிருந்து லொத்தர் சீட்டிழுப்பின் நிகழ்ச்சிகள் தேசிய தொலைக்காட்சியில் இரவு 9.35ற்கு இடம்பெறும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663

இணையதளம்: www.nlb.lk



# IIS CITY CAMPUS

# ADMISSIONS ARE NOW OPEN FOR JANUARY 2010 INTAKE

## Department of Computing

| Courses | Duration | Awarding Body |
|---|---|---|
| Higher National Diploma in Computing (General) | 2 Years | edexcel advancing learning, changing lives |
| Higher National Diploma in Computing (ICT System Support) | 2 Years | |
| Higher National Diploma in Computing (Software Development) | 2 Years | |
| Higher National Certificate in Computing (Software Development) | 1 Year | |

## Department of Civil Engineering

| Courses | Duration | Awarding Body |
|---|---|---|
| Higher National Diploma in Civil Engineering | 2 Years | edexcel advancing learning, changing lives |
| Higher National Diploma In Quantity Surveying | 2 Years | |
| Diploma in CAD & BS | 6 Months | IIS CITY CAMPUS |

## Department of Business & Management

| Courses | Duration | Awarding Body |
|---|---|---|
| Higher National Diploma in Business Management | 2 Years | edexcel advancing learning, changing lives |
| Higher National Diploma in Business (Marketing) | 2 Years | |
| Higher National Diploma in Business (Finance) | 2 Years | |
| Higher National Diploma in Business (Human Resource Management) | 2 Years | |
| Higher National Diploma in Business (Information Technology) | 2 Years | |
| Master of Business Administration (MBA) | 2 Years | MANIPAL |
| **PG Diploma in Marketing** | | |
| Introductory Certificate in Marketing | 3 Months | CIM The Chartered Institute of Marketing |
| Professional Certificate in Marketing | 6 Months | |
| **PG Diploma in Marketing** | | |
| Preliminary Certificate in Marketing | 3 Months | SLIM Sri Lanka Institute of Marketing |
| Certificate in Marketing | 6 Months | |
| **Certified Management Accountant** | | |
| Technician Stage | 6 Months | CMA |
| Intermediate Stage | 6 Months | |

SUCCESS THROUGH KNOWLEDGE

கற்கை நெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை 0214900900 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். மேலும் ஆர்வமுள்ளவர்கள் இவ்விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புவதன் மூலம் இக்கற்கை நெறி தொடர்பான மேலதிக விபரங்கள் உங்களிற்கு அனுப்பி வைக்கப்படும்.

1. Name of the Applicant :........................
2. Address :........................
3. Telephone No :........................
4. Qualification
   a) G.C.E (O/L)........................
   b) G.C.E (A/L)........................
   c) others........................
5. The Streams of study:
   a) Maths ☐ b)Bio ☐ c)Arts ☐ d)Commrece ☐
6. Course Interested to Study:........................

For Office Use Only

Edexcel International
'A' rated centre for quality for the 5th consecutive year

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road,
Jaffna.
Tel: 021 222 8060
Fax: 021 222 6933
Email: iiscc @sltnet.lk
Web:www.iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடாநாட்டில் பரவலா... பெய்த கனத்த மழைக்கு மத்தியிலும் நேற்று மாலை வீடுகளில் மக்கள் கார்த்திகைத்தீபம் ஏற்றினர். பெய்த அடைமழையால் வீதிகளில் மிகக் குறைவான தீபங்களையே காணமுடிந்தது. ஆலயங்கள் பலவற்றிலும் சொக்கர்ப்பனை தீபம் ஏற்ற இயலாதிருந்தது.நகரில் ஒரு சில கோவில்களிலேயே சொக்கர்ப்பனை ஏற்றப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

வீட்டு மதில் ஒன்றில் தீபங்கள் வரிசையாக ஏற்றப்பட்டிருப்பதையும் மழைக்கு மத்தியிலும் வீட்டு வாசலில் தீபம் ஏற்றப்படுவதையும் நகரின் ஆலயம் ஒன்றின் தேர்முட்டிப் படிகளில் தீபங்கள் ஏற்றப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

# வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்தோரை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துக!

## ஜனாதிபதிக்கு தமிழரசுக் கட்சி கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.02

வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த அனைவரும் அவரவரது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மேற்கண்ட கோரிக்கையை இலங்கைத் தமிழரசுக் கட்சி விடுத்துள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா, கௌரவ செயலாளர் சே.குலநாயகம் ஆகியோர் கூட்டாக நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளை நேற்றுக் கூடி பின்வரும் விடயங்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென தங்களை கோருவதாக ஏகமனதாக தீர்மானித்துள்ளது என்பதை தங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

* வன்னி நலன்புரி நிலையங்களில் எஞ்சியுள்ள சகல இடம்பெயர்ந்தோரையும் அவரவரது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துதல்.
* வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த அனைவரையும் அவரவரது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துதல்.
* யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த சகல முஸ்லிம் மக்களையும் அவர்களது சொந்த இடங்களிலேயே மீளக் குடியமர்த்துதல்.
* இடம்பெயர்ந்தோருக்கு தற்போது வழங்கப்படும் உதவிகள் போதுமானதாக இல்லாததால் போதியளவு நிதி மற்றும் ஏனைய உதவிகளை, அவர்களது வாழ்வாதார நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் பொருட்டு வழங்க வேண்டும்.
* மீளக்குடியமரும் போது உடனடி உதவியாக ஆகக்குறைந்தது 50 ஆயிரம் ரூபாவாவது வழங்க வேண்டும்.
* வாழ்வாதார நடவடிக்கைகளைப் பொறுத்து விவசாய மற்றும் மீன்பிடி உபகரணங்களை மீளக்குடியமர்ந்து ஒரு மாத காலத்தினுள் வழங்குதல் வேண்டும்.

தங்கள் துரிதமான நடவடிக்கைக்கு நன்றியுடையவராவோம் - என்றுள்ளது. (ஒ-1)

# ஜனாதிபதி செயலக அதிகாரிகள் கலந்து கொள்ளும் செயலமர்வு

## நாளை இராமநாதன் கல்லூரியில்

ஜனாதிபதி செயலகத்தின் அனுசரணையுடன் 'மதர் ஸ்ரீலங்கா' செயற்திட்டச் செயலமர்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

ஜனாதிபதி செயலகம்,மாகாண மற்றும் மத்திய கல்வியமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

வலிகாமம் கல்விவலயத்தைச் சேர்ந்த 1ஏபி, 1சி,தரம் இரண்டு ஆகிய பாடசாலைகளின் அதிபர்களையும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் , உதவிக்கல்விப் பணிப்பாள்கள்,ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ-1)

# சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு

சாவகச்சேரி,டிசெ.2

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் குருளைச் சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும், மூத்த சாரணர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தி கலந்து கொள்வார்.

நிகழ்வில் சாரணர்களுக்கு சின்னம் சூட்டுவதோடு, சாரணர் தலைவராகி பல விருதுகள் பெற்ற 47வருட சேவை நிறைவாகும் கலாநிதி மா.புவனேந்திரன்,சாரணர் தலைவராகி 34வருட சேவை நிறைவாகும் திருமதி.ஆர். ஜே.பி. சேவியர் ஆகியோர் பாராட்டுப் பெற உள்ளனர். (ஒ-7)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளில் மாற்றம் இருப்பின் உடன் திருத்தம் செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.02.

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அனுமதி அட்டைகளில் மாற்றம் இருப்பின் உடன் தகவல் தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட அனுமதி அட்டைகள் கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாகத் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை அனுமதி அட்டைகளைப் பெறாத பாடசாலைகளின் அதிபர்கள் உடன் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அனுமதி அட்டைகளில் ஏதாவது மாற்றம் செய்ய இருப்பின் உடன் தெரியப்படுத்தினால், அதற்கான திருத்தங்களைப் பரீட்சை ஆணையாளர் மூலம் மேற்கொள்ளமுடியும் - என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-1)

# நவாலி வயல்வெளி வெள்ளத்தில் கழுத்து நெரியுண்ட பெண்ணின் சடலம்

நவாலி,டிசெ.02

நவாலி வயல்வெளியில் கழுத்து நெரிக்கப்பட்டு கொலையுண்டதாகக் கருதப்படும் பெண் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது.

களையோடை அம்மன் ஆலயத்திற்குச் சமீபமாக - பிரதான வீதியோரமாகவுள்ள வயல் வெள்ளத்தில் நாக்கு வெளியே தள்ளிய நிலையில் சடலம் காணப்பட்டதாக அப்பகுதிக்குச் சென்ற விவசாயிகள் தகவல் தெரிவித்தனர்.

மஞ்சள், சிவப்பு நிற பஞ்சாபி உடை அணிந்து கையில் கௌரி காப்பு நூலும் கட் டியிருந்த அப்பெண் சுமார் 30 வயது மதிக்கத் தக்கவர் என்று கூறப்பட்டது.

நெற்றியிலும் முகத்திலும் கடியுண்ட காயங்களும் காணப்பட்டன என்றும், காதிலிருந்து தோடுகள் அறுத்தெடுக்கப்பட்ட அடையாளங்கள் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.இத்தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அங்கு திரண்டு நின்ற மக்கள் எவரும் சடலத்தை அடையாளம் காட்டவில்லை.

அந்தப்பெண் வேறிடத்தில் கொலை செய்யப்பட்டு பின்னர் சடலம் அப்பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர்.

சம்பவ இடத்தில் மல்லாகம் பதில் நீதிவான் என். தம்பிமுத்து மரண விசாரணை நடத்தியதை அடுத்து பெண்ணின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டது. (ஒ-100-302-86)

# 13ஆவது சட்டத் திருத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் அரசின் பங்காளிக் கட்சிகளான ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகியவை ஒருபுறமாகவும், ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை இன்னொரு புறமாகவும் 13ஆவது திருத்தம் தொடர்பில் பகிரங்கமாக முரண்பட்டு நிற்கின்றன. அரசின் அரசியல்வாதிகள் மூலமாகவும், ஊடக நண்பர்கள் மூலமாகவும் அரசில் இணைந்துகொள்ள எங்களுக்கு அழைப்பு விடுப்பதற்கு முன்னர், தமது கூட்டணிக்குள் இருக்கும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பிலான முரண்பாடுகளுக்கு ஜனாதிபதி முடிவுகாணவேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தனும் மாகாணசபைகளுக்கு மேலதிக அதிகாரங்களைக் கோருகின்றார்கள். இது 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்வதாகும். இதை நாங்கள் வரவேற்கின்றோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாக இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மன்மோகன்சிங்கிடம் உறுதியளித்திருந்தார். இன்று இதை ஜனாதிபதியும் மறந்துவிட்டார். இந்திய அரசும் மறந்துவிட்டது.

### ஆளும் தரப்புக்குள்ளேயே முரண்பாடுகள் அதிகம்

எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா, தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்லவேண்டிய தேவையைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். சரத் பொன்சேகாவின் இந்தக் கருத்தை அரசின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமயவின் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும், தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ஸவும் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். விமல் வீரவன்ஸ ஒருபடி மேலேபோய் சரத் பொன்சேகாவின் இந் நிலைப்பாடு ஜே.வி.பிக்கு ஏற்புடையதா என்ற மேதாவித்தனமான கேள்வியையும் எழுப்ப, பொது ... முரண்பாடு ... கூறுகின்றார்.ஆனால் உண்மையிலேயே ஆளுகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுள்ளே இருக்கும் கட்சிகள் மத்தியில்தான் முரண்பாடு பகிரங்கமாக இருக்கின்றது.

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு என்பது 13வது திருத்தத்திற்கு அப்பால் செல்லப்போகின்றதா இல்லையா என் பது பற்றி ஆளும் கூட்டணியின் உத்தேச ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். ஜனாதிபதி தேர்தல் நியமனத்திற்கு முன் தெரிவிக்கவேண்டும்.

### அரசு சார்ந்த தமிழ் அரசியல் வாதிகள் பதில் சொல்லியாக வேண்டும்

தமிழ் மக்கள் சம்பிக்க ரணவக்கவையும், விமல் வீரவன்ஸவையும் கணக்கில் எடுக்கப்போவதில்லை. இவர்களை நாங்கள் அரசியல்வாதிகளாகவே பார்ப்பதில்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தமிழ் மக்களின் வாக்குகளைக் கோருகின்ற தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு இது தொடர்பில் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகம் தொண்டமான், பெ.சந்திரசேகரன், முதலமைச்சர் சந் திரகாந்தன் மற்றும் ஆதரவு தெரிவிக்கும் தமிழ் அரசியல் தலைவர்களான சித்தார்த் தன், ஆனந்தசங்கரி ஆகியோரது பதில்கள் தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

இன்று போர் முடிவுக்கு வந்துவிட்டது. இனிமேலும் தேசிய இனப்பிரச்சினையை வைத்து எந்தவொரு ஜனாதிபதி வேட்பாள ரும் அரசியல் சித்துவிளையாட்டு விளையாட முடியாது. பாம்பிற்கு தலையையும் மீனுக்கு வாலையும் காட்டி அரசியல் நடத்த முடியாது. தெளிவான அரசியல் காரணங்கள் இல்லாமல் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் தமிழ் மக்கள் கண்களை மூடிக்கொண்டு வாக்களிக்க மாட்டார்கள். ஜனாதிபதி தேர்தல் முடிந்த பிறகு இனப் பிரச்சினைக்கான தீர்வை அறிவிப்போம் என்ற பழைய பல்லவியை நம்பி ஏமாறுவதற்குத் தமிழ் மக்கள் இனிமேலும் தயாராகவும் இல்லை. இதுவே இந்நாட்டின் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மலையகம் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் வாழுகின்ற தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடாகும். இந்த உறுதிப்பாட் டையே நான் எதிரொலிக்கின்றேன்.- என்று உள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூண்டில் இருந்து வெளியேறும் மனிதக் குருவிகள்



கடந்த 7 மாதங்கள் தொடர்ச்சியாக முட்கம்பி கூண்டில் அடைத்த பறவைகள் போல் முடங்கித் தமது சுதந்திர வாழ்க்கையைத் தொலைத்த மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட மனோநிலையில் நேற்று வெளியில் நடமாட ஆரம்பித்தனர். வெளியுலகத்தை காணாது இருந்த அந்த மக்கள் தமது உறவுகளைத் தேடிச் செல்வதற்கு விழுந்தடித்துக் கொண்டு வெளியேறும் காட்சிகள் இவை.

## வவுனியா அகதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்துக்கும் அதிகமான மக்கள் முகாமிலிருந்து வெளியேறினர் என்று வவுனியா பதில் பிரதேச செயலாளர் என்.திருஞானசம்பந்தர் தெரிவித்தார்.

''முகாமிலிருந்து செல்வதற்கான போக்குவரத்தே பிரச்சினையாகவுள்ளது. எனினும், மக்கள் அங்கிருந்து செல்வது குறித்து மகிழ்ச்சியாகவுள்ளனர்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்துள்ளவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தற்போதைக்கு விடுவிக்கப்படமாட்டார்கள். முகாமிலேயே அவர்கள் தங்கவைக்கப்படுவர்.

முகாமிலிருந்த மக்கள் 15 நாள்கள் வெளியில் தங்கியிருந்துவிட்டு மீண்டும் முகாம்களுக்குத் திரும்புவதற்கான அனுமதியை வழங்கும் கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டன என்று அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மீண்டும் வெளியேறுவதென்றால் மீண்டும் தம்மை பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-சி)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து யாழ்.மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள துணை நூல் விற்பனை நிலையத்தையும் ஜனாதிபதி திறந்து வைப்பார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 'இசுறு' திட்டக் கட்டடத்துக்கான அடிக்கல்லை அவர் நாட்டவிருக்கிறார்.

ஜனாதிபதி எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தருவார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-1)

## வலி.வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசியில் கலந்துரையாடிய வேளை இதனைத் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்குப் பிரதேச மக்கள் நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடத்திய கூட்டம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக பஸில் ராஜபக்ஷ தொடர்பு கொண்டார் என்றும் -

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பாக விவரங்களைக் கேட்டறிந்தார் என்றும் - மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஜனாதிபதி எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் போது இடம்பெயர்ந்தோர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்வதாக பஸில் ராஜபக்ஷ கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-1)

## தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் கடந்த மே மாதம் தோற்கடிக்கப்பட்ட பிற்பாடு இலங்கையில் இயல்பு நிலையும், சுமுகமான சூழலும் தற்போது ஏற்பட்டுள்ளன.

கடந்தகால யுத்தத்தால் சுமார் ஒரு இலட்சத்து 23 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் அவர்களின் சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அவர்கள் அனைவரும் எதிர்வரும் இரு மாதங்களுக்கு இடையில் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள்.

## கப்பலில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக இலங்கை அரசின் உதவியைக் கோர உத்தேசித்துள்ளார்கள்.

இந்த இளைஞர்கள் சிலரின் பின்னணி மிகவும் மர்மமாக இருக்கின்றது என்று அவர்கள் சந்தேகிக்கின்றார்கள். எனவே இந்த இளைஞர்களால் கனடாவின் பாதுகாப்புக்கு வருங்காலத்தில் அச்சுறுத்தல்கள் நேரலாம் என்று கனேடிய அரசு மிகவும் எச்சரிக்கையாக உள்ளது. அத்துடன் அந்நாட்டின் குடிவரவுத் திணைக்களமும் மற்றும் அகதிகள் சபை யும் அரசின் இந்த முன்னெச்சரிக்கையும் விழிப்புணர்வும் சரியானவை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளன.

இந்நிலையிலேயே இந்த இளைஞர்களில் புலிகள் யார்? அகதி அந்தஸ்து பெறுவதற்கு அருகதையுடைய சாதாரண பொது மக்கள் யார் என்று பிரித்தறிவதில் கனடா பகீரதப் பிரயத்தனம் எடுத்துள்ளது. இவர்களின் பின்னணி குறித்து அறிவதற் காகவே இலங்கையின் உதவியையும் கோர உத்தேசித்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## மஹிர் தவுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முத்து சிவலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதித் தேர்தல் ப்ற்றி பல ஊடகங்கள் கருத்துகளைப் பலவாறு வெளியிட்டு வருகின்றன. இந்த வேளையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே ஏகமனதாக ஆதரிக்க எமது கட்சி உறுதி பூண்டுள்ளது. இது தொடர்பாக மக்களையும் சந்தித்து பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. நாங்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே ஆதரிப்போம்.'' என அவர் குறிப்பிட்டார்.

## சரத் பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடின் அவர் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவது தடங்கலுறலாம் என்று கருதப்பட்டது.

அதாவது அவரது நியமனப் பத்திரத்துடன் அவர் பதவியிலிருந்து நீங்கியதை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலும் இணைக்கப்பட வேண்டும் என்பது தேர்தல் விதி. அவ்வாறு இணைக்கப்படாவிட்டால் அவரது நியமனப் பத்திரம் தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்படலாம் என்று பொன்சேகாவின் சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சரத் பொன்சேகா டிசெம்பர் முதலாம் திகதியிலிருந்தே ஓய்வு பெறுவதாக தமது கடிதத்தில் தெரிவித்திருந்தமையால் அ[illegible] பின்னர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீர துங்க நேற்றுத் தெரிவித்தார். (அ-1)


20 ஆம் ஆண்டிவில் ஏசியன் அக்கடமி
ஏசியன் அக்கடமி கேணியடி கொக்குவில் மேற்கு
கல்வியாண்டு 2010
ஆரம்பம் 02.12.2009 புதன் மாலை 4.30
எமது வழமையான ஆசிரியர் குழு

யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ். வீதி (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை) யாழ்.
உயர் தொழில்நுட்பத்திலான நவீன முறை
அச்சுப்பதிப்பகம்.
சகல விதமான அச்சுப்பதிப்புக்களையும் நவீனமுறையில் ஓவ்செற் பிறிண்டிங் செய்து கொள்ளலாம்

தேவை
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சேவிஸ் ஸ்ரேசன் அமைப்பதற்கு இடம் தேவை
தொடர்பு: 0775790458

வகுப்புகள் ஆரம்பம்
தரம் குன்றாத கற்பித்தலில்... 22 ஆண்டுகளைக் கடந்து...
2010 புதிய கல்வியாண்டில்
தரம் 1 முதல் O/L வரையான சகல வகுப்புகளும்
05.12.2009 சனி பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.
உயர் கல்விக்கு வழிகாட்டிடும் ஒரே நிறுவனம்.
புதிய அனுமதிகள் ஜனவரி 15 வரை வழங்கப்படும்.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

புத்தாண்டை வரவேற்க
1.12.2009 - 31.12.2009
மாபெரும் அதிரடி சலுகை!
(ஸ்ருடியோக்களுக்கு மட்டும்)
4R - 9/=
1000 இற்கு மேல் பிரதியாக்கம் செய்வோருக்கு 8.50
10x15 - 60/= (Fuji)
பனர், ஸ்ரிக்கர் - 70/=
மூர்த்தி டிஜிட்டல் கலர்லாப் யாழ்ப்பாணம்.
(சி/562830)

34வது வருட சேவை
பொறுத்திருங்கள்
DECEMBER 10
தரம் 6,7,8,9,10, O/L
EVENING BATCH
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

College of Chemistry
கந்தர்மடம் உரும்பிராய்
செ: 2.0 | பு: 4.30
பு: 2.0 | வி: 4.30
வி: 2.0 | வெ: 4.30
Day class
ஆரம்பம்: 02.12.2009
N.Kapilan B.sc

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
A/L 2011, 2010 Day Class
தமிழ்: S.சிவா
அரசியல்: S.ஸ்ரனிஸ்லாஸ்
நாடகம்: J. ஜோன்சன்
புவி: A.RAJAH
அளவை: S. றொபேஷியன்
கிறிஸ்: A. மல்லிகா
இந்துநாகரிகம்: S. கார்த்திக்
ENG { A.T .MUTHU / G.RANGIT
ECON:- NB. ஜீதரன்
B.St.B. S.பசில்
ACC: S.தவா
C/ma: G.கண்ணன்
C/HE: M.A.நிரோஷன்
PHY: ஆசிரியர்
★ SPOKEN ENGLISH
★ SINHALA
(பேச, எழுத, வாசிக்க)

மலவு விலையில் உடன் விற்பனை
பிரின்டிங் ஒவ்செட் அச்சு இயந்திரம்
HARRIS-125. MODEL. SIZE-18 X 25. MADE IN ITALY நல்ல நிலையில் உள்ளது.
தொடர்பு: 0786635540

இன்று ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
ECO- B.கஜீதரன்
ACC- திரு.பகிரதன்
B.ST- திரு.யசோ
02.12.2009 புதன் 10 மணி

YOGI'S (BEAUTY CARE AND ACADEMY)

X'MAS Demonstration Classes
பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்.
1. ஆறு வகையான Short Eats வகைகள் 05.12.2009 (6 Different Short Eats) காலை 10 மணி
2. ஆறுவகையான கேக் வகைகள் 06.12.2009 (6 Different Cakes mixtures) காலை 10 மணி
3. ஆறு வகையான Sweets வகைகள் 07.12.2009. (6 Different Sweets) காலை 10 மணி
சேர விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2796, 021 321 0077, 0777164923.
(சி-1862860)


## மரண அறிவித்தல்

### திருமதி அனந்தலக்ஷ்மி அம்மா சபாரத்தினஐயர்

காலஞ்சென்ற முதலியார் சபாரத்தினஐயர் அவர்களின் மனைவி அனந்தலக்ஷ்மி அம்மா இன்று (02.12.2009) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.12.2009 பிற்பகல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். சபாரத்தின ஐயர் ஈஸ்வரசர்மா.


யாழ். நகரில் மீண்டும் புதுப் பொலிவுடன் மண்டேலா புத்தகசாலை
பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள் மற்றும் பொலித்தீன் சொப்பிங் பாக், அலுவலகங்களுக்கு தேவையான அனைத்துப் பொருள்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
★ மொத்தமாக பொருள்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
★ கிறிஸ்மஸ்சிற்கு தேவையான அனைத்துப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
மண்டேலா புத்தகசாலை,
இல. 02. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(92699)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.